பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 18 | 04 - 12 - 94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 289

## கி.மு. 30,000 ஆண்டு பழைமையான எலும்புக்கூடு இலங்கையில் மீட்பு

[கொழும்பு]

தென்னாசியாவிலேயே மிகவும் பழைமையானஎலும்புக்கூடு இலங்கையில் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது கிறிஸ்து பிறப்பதற்கு 30,000 ஆண்டுகள் முந்தியதாக இருக்கலாம் என கணிப்பிடப்படுகிறது. இந்த எலும்புக்கூடு களனி பல்கலைக் கழக தொல்லியல் துறையினரால் விரிவாக ஆராயப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. தொல்லியல் நிபுணர் எச். ஜே. தெரணியகல இவ் ஆய்வினை மேற்கொண்டு வருகிறார். இவ் ஆய்வினைத் தொடர்ந்து அன்றைய மனிதனை பற்றி மேலும் பல தகவல்கள் வெளியாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய அரசின் பெரும் சலுகை அறிவிப்புக்கள்

# பொருளாதாரத்திற்கு கெடுதல் விளைவிக்கும்!

## உலக வங்கியின் எச்சரிக்கை

(கொழும்பு)

சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் புதிதாக மீண்டும் அறிமுகமாக்கியுள்ள மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் எதிர்காலத்தில் சிறிலங்காவின் பொருளாதார வீழ்ச்சிக்கே வழிவகுக்கும் என கொழும்பு வந்துள்ள உலக வங்கியின் தென்னாசிய விவகாரங்களுக்கான உயர் அதிகாரி போல் ஐசக் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கம் இலவசமாகவும், மானியமாகவும் பொருள்களை தொடர்ந்தும் மக்களுக்கு வழங்கிக் கொண்டே இருக்குமானால் மேற்கூறப்பட்டவாறு சிறிலங்கா அரசாங்கம் பெரும் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் முதலீடுகளை சிறிலங்காவில் மேற்கொள்ள தயங்கி வருவதாகவும் இது தொடருமானால் ஏனைய ஆசிய நாடுகளான இந்தியா, பங்களாதேஷ், வியட்னாம், சீனா என்பவற்றோடு சந்தைவாய்ப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உலகவங்கியின் வேலைத்திட்ட குழு 9ஆம் திகதி யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களை முழுமையாக புனரமைப்பு செய்வதற்கான உலக வங்கியின் வேலைத் திட்டக் குழு எதிர்வரும் ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆறுபேர் கொண்ட இந்தக் குழுவில் ஒருவர் மாத்திரமே சிங்கள அதிகாரி என்றும் மீதிப்பேர் தமிழர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்று அல்லது நாளை இக்குழு கிளிநொச்சிக்கு வந்து சேரும் என்றும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் புனர்வாழ்வு வேலைகளைப் பார்வையிட்டு அது சம்பந்தமான புள்ளி விபரங்கள் பெற்றதன் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு கிளாலி கடல் நீரேரிஊடாக இக்குழு வந்துசேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை புனர்அமைப்புசெய்வது தான் உலக வங்கியின் நோக்கம் என்றும் இத்திட்டத்திற்கு அமைய மாவட்டங்களை பார்வையிட்டு விபரங்கள் சேகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வந்துசேரும் இக்குழுவிடம் கடந்த மாதம்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## 10 வாரங்கள் நிவாரணம் இல்லை; இடம்பெயர்ந்தோர் பெரும் அவதி

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கு கடந்த பத்து வாரங்களாக இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படாமையினால் இடம்பெயர்ந்த மக்கள் தங்களது அன்றாட சீவியத்திற்கே பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

இந் நிலையில் யாழ் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு எழுந்துள்ள கட்டத்தில் நிவாரண விநியோகமும் இவ்வாறு தாமதிப்பதால் சொல்லொணாதகஷ்டத்தைஅனுபவித்து வருவதாக இடம்பெ

கூறப்படுகின்றது.

மழை காலத்தை கருத்தில் கொண்டு, உணவுப் பொருள்களை கையிருப்பில் வைத்திருப்பதற்கு செயலகம் ஏற்பாடுகளை செய்யவில்லை எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை பருத்தித்

## க. பொ. த. பரீட்சைக்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் நாளை ஆரம்பமாக இருக்கும் க. பொ. த. (சா/தர) பரீட்சைக்கு யாழ்மாவட்டத்தில் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் இப் பரீட்சைக்கென அமைக்கப்பட்டு என. அத்துடன் பரீட்சைக்கான வினாத்தாள்கள் பரீட்சையின் போது ஒவ்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## சந்திரிகா செல்லவிருந்த ஹோட்டலில் 3 தமிழர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மாநாடு ஒன்று நடைபெற்ற ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் மாநாடு தொடங்க சில மணி நேரங்களுக்குமுன் புலனாய்வு பொலிசார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் அங்கு தங்கியிருந்த மூன்று தமிழ் இளைஞர்கள் விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டுள்ளனர்

கடந்த வெள்ளியன்று கொ

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க-இ. தொ. கா உடன்பாட்டை கவனமாகப் பரிசீலனை செய்க

னால் இடம்பெயர்ந்த மக்கள் தங்களது அன்றாட சீவியத்திற்கே பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

வாரா வாரம் வழங்கப்பட்டு வந்த இலவச நிவாரணத்தை நம்பியே இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் அன்றாட சீவியத்தை நடத்தி வந்தனர்.

வாறு தாமதிப்பதால் சொல்லொணாதகஷ்டத்தைஅனுபவித்து வருவதாக இடம்பெயர்ந்த மக்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

யாழ் செயலக புனர்வாழ்வு பகுதியின் கையிருப்பில் உணவுப் பொருள்கள் இல்லாததனாலேயே நிவாரண விநியோகம் தாமதமாவதாக

டுகளை செய்யவில்லை எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை பருத்தித்துறைக்கு கோமாரிக் கப்பல் வந்து சேர்ந்ததும் பொருள்கள் இறக்கப்பட்டு நிவாரண விநியோகம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இழுவைப் படகு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

து ...ளது.

யாழ் மாவட்டத்தில் இப்பரீட்சைக்கென அமைக்கப்பட்டுள்ள 193பரீட்சை நிலையங்களில் சுமார் இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சை நிலையங்களுக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும்ஆவணங்கள் என்பன யாவும் விநியோகிக்கப்

# கவனமாகப் பரிசீலனை செய்க

## சொக்ஸியிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கும் இடையில் எட்டப்பட்ட உடன்பாட்டை கவனமாகப் பரிசீலிக்கும்படி ஐ. தே. கவின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா கேட்டுக் கொண்டுள்ளார். அரசியலமைப்பு விவகாரங்களில் நிபுணரும், ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் அமைச்சருமான கே. என். சொக்ஸியை இவ் உடன்பாடு தொடர்பாக ஆராயும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இதன் அடிப்படையிலேயே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்து கொண்டுள்ள அமைச்சர் தொண்டமான் மற்றும் இ. தொ. காவினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# ஆனையிறவு பாதை மட்டுமே போக்குவரத்திற்கு திறக்க முடியும்

## ஹமில்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டின்மக்கள் ஏனைய பகுதிகளுக்கு செல்ல கூடிய பாதையாக ஆனையிறவு பாதையை மட்டுமே எம்மால் திறந்துவிட முடியும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிங்கள தினசரிக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இக் கருத்தை தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆனையிறவில் தற்போது நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தொடர்பாக அவர் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

# மழையைப் பயன்படுத்தி புலிகள் தாக்கலாம்

## இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் கடும் மழை பெய்துவருவதை சாதகமாக்கி விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தலாம். எனவே பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாக்கவேண்டும். இவ்வாறு சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்புத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுளது.

விடுதலைப் புலிகள் சிறு குழுக்களாக பிரிந்து இராணுவ இலக்குகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் அவ் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க. ஆட்சியில் பதவி விலகிய

# பொலிஸ் அதிகாரிகள் பதவி வழங்க கோரிக்கை

(கொழும்பு)

பத்து வருடங்களுக்கும் மேலாக சேவை செய்து, கடந்த அரசாங்க காலத்தில் பதவிகளை இராஜினாமாச் செய்த பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று மீண்டும் சேவையில் பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் பெற்றுத் தரு

(6ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா விமானப் படைத் தளத்தை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வவுனியா விமானப்படைத் தளத்தை விஸ்தரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இதன் ஒரு கட்டமாக தச்சன் குளத்திலுள்ள விமானத் தளத்ருக்கு அருகிலுள்ள இராணுவ முகாமை சுற்றி புதிதாக வேலி அமைக்கப்பட்டு வருகின்றது.

இதனால் இறம்பைக்குளம், சகாயமாதாபுரம் வீடமைப்பு திட்டப்பகுதி மக்கள் பெரிதும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மைதானமும் முகாம் எல்லைக்குள்ளேயே இருப்பதால் மாணவர்கள் விளையாட்டு மைதானத்துக்கு செல்லவும் தடையேற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- பூநகரி கூட்டுப்படைத் தளம் தகர்ப்பு -

# ராணுவ நீதிமன்றின் சிபார்சின்படி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குக!

## அமைச்சர் ரத்வத்தயிடம் பாதிக்கப்பட்டோர் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் பூநகரி முகாம் தாக்கப்பட்டமை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த இராணுவ நீதிமன்றத்தின்சிபார்சுகள் அமுல் ந த்தப்பட வேண்டுமென மேற்படி தாக்குதலில் காயமடைந்து உடல் ஊனமுற்ற படையினர் மற்றும் அத்தாக்குதலில் உயிரிழந்த படையினரின் பெற்றோர்கள் ஆகியோர் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தவை கேட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் 600 படையினர் கொல்லப்பட்டனர், 700க்கு மேற்பட்ட படையினர் காயமடைந்தனர். அவர்களில் பலர் நிரந்தர ஊனமடைந்துள்ளனர். இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்த இராணுவ நீதிமன்றம் 17 சிபார்சுகளை வழங்கியது.

தாக்குதல் தொடர்பாக முகாமில் கடமையாற்றிய உயர் அதிகாரிகளுக்கு முன்னெச்சரிக்கை விடுத்த போதிலும் அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக முகாம் தாக்கப்பட்டதென இராணுவ நீதிமன்ற விசாரணைஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்க காலத்தில் இராணுவ நீதிமன்ற அறிக்கையை அமுல் படுத்தாது முடக்கி வைக்கப்பட்டது. தற்போது உயர் பதவி

(6ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ்மா அதிபர் பதவி ராஜகுருவிற்கு வழங்கத் தீர்மானம்?

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ராஜகுருவை மீண்டும் சேவையில் சேர்த்து பொலிஸ்மா அதிபராக நியமிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய இவர் கடந்த அரசாங்க காலத்தில் சேவை நீடிக்கப்படாத நிலையில் ஒய்வுபெறுமாறுகேட்கப்பட்டதாகவும்,

புதிய அரசாங்கம் பதவியேற்றதும் மீண்டும் ராஜகுருவை சேவையில் சேர்த்து பொலிஸ்மா அதிபராக நியமிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்திருப்பதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# உலகவங்கி உதவி வழங்கும்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டவுடன் நடைபெறும் புனரமைப்பு வேலைகளுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**English Practice Personal Classes**

பாடசாலை விடுதலையை முன்னிட்டு ஒரு மாதத்திற்கு பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள், இலக்கணம் - வசனத் தொகுப்பு சிறு கட்டுரைகள் கற்பிக்கப்படும். தொடர்பு: க. சபாநாயகம்4பிள்ளையார் ஓழுங்கை, பலாலிறோட், திருநெல்வேலி. ஆரம்பம் 3-12-94 காலை 9.00 மணி. (10233)

**நீரிழிவு ஔடதம்**

நீரிழிவு நோயாளருக்கென பாவிக்கக் கூடிய ஆட்டாமா, குரக்கன்மா, ஒடியல் மா, மற்றும் வறுத்த உழுந்துமா, பச்சை உழுந்துமா, தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் பெற்றுக் கொள்ளுமிடங்கள்; அண்ணா கோப்பிக் கடை (யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில்) (சி-10676)

**டிசம்பர் விடுமுறையில் பயிற்சி வகுப்புக்கள்**

கேக்ஐசிங், சமையற்கலை, ஒப்பனைக்கலையும் தலை அலங்காரமும் ஒருமாதகால வகுப்புக்கள் 5. 12. 94 திங்கள் முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். Yogi Home Science Academy 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர். (10241)

**WANTED TYPEWRITER**

**உடனடியாகத் தேவை**

ஒரு புதிய அல்லது நல்ல நிலையில் உள்ள ஆங்கில PORTABLE) தட்டச்சு இயந்திரம் உடனடியாகத் தேவை. விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ளவும். முருகப்பிள்ளை மணிவாசகம் மொழி பெயர்ப்பாளர்) நினேஸ் புத்தகசாலைஇல19, பழைய பஸ் நிலையம் யாழ்ப்பாணம் (10239)

**விற்பனைக்கு**

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 698/15 சபாபதி வீதி, தலையாழி, வைரவர் கோவிலுக்கண்மையில் யாழ். (10268)

**தவறிவிட்டது**

Modern Management methods என்னும் ஆங்கிலப் புத்தகம் 2. 12. 94 அன்று நல்லூரில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10283)

**வெளிவந்து விட்டது**

A. L. மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உயர்தர மாணவர் பௌதிகம் வரிசையிலுள்ள சடப்பொருளின் இயல்புகள். கடந்தகால 1994 உட்பட வினாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அ. கருணாகரர். (10269)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Prima, Chris Thomby புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம்9, றக்கா வீதி (Farக்கு முன்பாக) யாழ்ப்பாணம் (10270)

**வெற்றுப் போத்தல்கள்**

400 மில்லி லீற்றர் கொள்வனவு கொண்ட உருளை வடிவக் கருப்பு நிற போத்தல்கள் விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்'' (சி10825)

**ஆதாரம் காட்டிப் பெறவும்**

வவுனியா கந்தசாமி கோவில் வீதி வேல் மோட்டோர்ஸ் கராஜில் 72 ஸ்ரீ 1303 இலக்கமுடைய (லாண்ட்மாஸ்டர்) உழவு இயந்திரம் ஒன்று இரண்டு வருடகாலமாக கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. உரியவர்கள் ஆதாரத்துடன் தொடர்பு கொள்ளவும் மு. தெய்வேந்திரம் (ஞானி) 245 / 5 சந்தோசம் வீதி அரியாலை. (10278)

**விற்பனைக்குண்டு**

லேமான் பிறவுண் முட்டையிடும் பருவத்தில் கோழிகள், முயல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 245, ஆஸ்பத்திரி வீதி. (யுவானியர் ஆலயத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (10280)

## வீடு விற்பனைக்கு

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1994 திசெம்பர்30-ம் தேதிவரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**பதவிகள்:**

உதைபந்தாட்டம்/ வளை கோற்பந்தாட்டம்/ கூடைப்பந்தாட்டம்/ மேசை வரிப்பந்தாட்டம்/ பூப்பந்தாட்டம்/ மெய்வல்லுநர் பயிற்சிகள்/உடற்பயிற்சி விளையாட்டுக்கள்/ சதுரங்கம்/ கராட்டி/ துடுப்பாட்டம்/ வரிப்பந்தாட்டத்தில் இடைவரவுப்போதனாசிரியர்.

**கொடுப்பனவு விகிதம்:**

மணித்தியாலயம் ஒன்றிற்கு 75/- ரூபா (மாதமொன்றுக்கு 900/- ரூபா உச்சவரம்பிற்கு உட்பட்டு)

**தகைமைகள்:**

(1) தேசிய அணியொன்றையோ மாவட்ட அணியொன்றையோ தேசியப் பாடசாலை அணியொன்றையோ, இணைந்த பாடசாலை அணியொன்றையோ பிரதிநிதித்துவப்படுத்தியிருத்தல் வேண்டும்.

அல்லது,

(2) மாவட்ட அணியையோ மாவட்ட இணைந்த அணியையோ மூன்றாண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கு பயிற்றியிருத்தல் வேண்டும்.

அல்லது,

(3) விளையாட்டுத் துறை அமைச்சினால் நியமிக்கப் பெற்ற பயிற்றுநராக குறைந்த பட்சம் மூன்றாண்டுகளுக்குப் பயிற்றுதலில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது,

(4) பல்கலைக்கழக மட்டத்தில் விளையாட்டுகளைப் பயிற்றுதலில் அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும்.

அல்லது,

(5) பாடசாலை ஒன்றில் அல்லது களரியொன்றில் ஐந்தாண்டுப் பயிற்றுதல் அனுபவத்துடன் குறைந்தபட்சம் மூன்றாண்டுகளுக்கு மாவட்ட விளையாடடு சங்கத்தினால் நடாத்தப்பட்ட அங்கீகரிக்கப்

றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் விண்ணப்பிக்க வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதரவிபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளை யொன்றை 23X 10 ச.மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்ட 1/- ரூபா முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவத்தில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் தெளிவில்லாமல் விபரங்கள் எழுதப்பட்ட விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:- சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-12-01 (சி/10835)

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை

## 5 ஆண்டுகளில் இம்முறை அதிக மாணவர் தோற்றல்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இம்முறைதான் ஆகக் கூடுதலான மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

இதற்காக இலங்கை பூராகவும் 3500 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் யாழ் மாவட்டத்தில் 200 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ)

## விப்ஜியோர் அக்கடமி

(குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை)

**ஆண்டு 6 முதல் O /L வரை**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

4 - 12 - 94

(ஞாயிறு காலை 9 மணி)

| | |
|---|---|
| விஞ்ஞானம் | - J. J. கொலின்ஸ் |
| கணிதம் | - ஜெயக்குமார், அருள்ராஜ் |
| தமிழ் | - தங்கவேல் |
| சமூ. வரலாறும் | - கோபி |
| வர்த்தகம் | - அற்புதராஜா |
| ஆங்கிலம் | - ஜெயானந்தன், சேகர் |

(10256)

## உடனடி வேலை வாய்ப்பு

**தட்டெழுத்தாளர் (தமிழ்)**

தமிழ் தட்டெழுத்தாளர் ஒருவர் உடனே தேவை. வயது: 18 - 40 வயதுக்கிடையில். ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

## நினைவு கூருகின்றோம்...

**04.12.1994**

1987-ம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் இந்தியப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**றேகன்-வெள்ளை** (சோமசுந்தரம் விஸ்ணுபாலன் -புலோலி-பருத்தித்துறை)

யாழ்-தையிட்டிப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கண்ணன்( - - - )**

1988-ம் ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**ஆசிரியர் நாகமுத்து கருணானந்தசிவம்** (காங்கேசன்துறை - யாழ்)

1989-ம் ஆண்டு அம்பாறை-தம்பிலுவில் பகுதியில் எதிர்பாராவிதமாக ஏற்பட்ட படகுவிபத்தில் எமைப் பிரிந்த,

**நீசன்** (சுபமாலை மேகராசா - அக்கரைப்பற்று-அம்பாறை)

1992-ம் ஆண்டு மட்டு-அம்பாறை, களுவங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பாரதி** (பொன்னுத்துரை சந்திரகுமார்-வந்தாறுமூலை -மட்டு)

**குணபாலன்** (விதுரன் சிவராஜ்-மாவடிவேம்பு-மட்டு)

1993-ம் ஆண்டு ஒப்பரேசன் ''தவளை'' நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**சம்மந்தன்** (தங்கராசா யுவநாஸ் - அரசடித் தீவு-கொக்கட்டிச்சோலை-மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும், சிறிலங்கா படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10831)

## பகுதி நேர விரிவுரையாளர் 1995

## தொழில்நுட்பக்கல்லூரி யாழ்ப்பாணம்

1994- 11- 11-ம் திகதி வர்த்தகமானியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 1995-ம் கல்வியாண்டுக்கு பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் 1994- 12- 20 ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விபரங்களைத் தொழில்நுட்பக் கல்லூரியில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மேற்படி திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

க- ஜெயரெட்ணம்

கச்சேரி கிழக்கு ஒழுங்கை இல 46,பரப்பு2, ஆறு அறைகள் கொண்ட எல்லா வசதிகளுடனும் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்குண்டு

தொடர்பு:

ச.ஆனந்தகரன்
35, விபுலானந்தர் வீதி,
புங்கங்குளம்
அரியாலை

(10245)

த்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப்போட்டியொன்றில் வீரமுதல் வரை அல்லது, இரண்டாம் இடத்தைப் பெற்ற வரை உருவாக்கியிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது நிதிக்கிளையில் சிறாப்பரின் முகப்புமேசையில் 20/-ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்

கல்வித் தகைமை: க. பொ. த. (சா / த). கணிதத்திலும், தமிழிலும் விசேட சித்தி இருத்தல் வேண்டும். ஆங்கிலம் மேலதிகத் தகைமையாகக் கணிக்கப்படும்.
சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்,

**செயலாளர்:**

கல்வித் தகைமை: குறைந்தது க. பொ. த. (உ / த) அல்லது பட்டதாரி. தமிழில் விசேட புலமை இருப்பது விரும்பத்தக்கது.

க. பொ. த (சா / த) வில் தமிழையும் ஒரு பாடமாக எடுத்து அதில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ஆங்கிலத்தில் நன்கு எழுத, பேச, வாசிக்கவும், கடிதத் தொடர்புகளை மிக இலகுவாக கையாளக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது: 20 - 50 வயதுக்கிடையில்.

**முடிவுத் திகதி:- 15-12-94**

விள. இல. 361, மே/பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,யாழ்ப்பாணம்.

(10281)

க. ஜெயரெட்ணம்
அதிபர்

தொழில்நுட்பக்கல்லூரி,
பிறவுண்றோட்,
யாழ்ப்பாணம் (சி- 10829)

மானிப்பாய்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## கிளைக்குழுத் தேர்தல் 05-12-1994

கிளைக்குழுத் தேர்தல் நடைபெறும் கிளைகளும் இடமும்

| கிளை இல. | கிளையின் பெயர் | தேர்தல் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 69 | மானிப்பாய் | சங்க பழைய காரியாலயம் |
| 70 | சண்டிலிப்பாய் (மடத்தடி) | சண்டிலிப்பாய் வடக்கு த. க. பாடசாலை. |
| 71 | சீரணி | மணிமேகன் சனசமூக நிலையம் |
| 72 | மாகியம்பதி | சண்டிலிப்பாய் வடக்கு த. க பாடசாலை. |
| 78 | நவாலி | மதிஒளி சனசமூக நிலையம், நவாலி. |
| 79 | மில்லடி | சங்க தலைமைக் காரியாலயம். |
| 80 | சுதுமலை | யுவசக்திசனசமூக நிலையம். |
| 81 | கூளாவடி | வினோத் சிறுவர் பாடசாலை. |
| (82A,82B) | (ஆனைக்கோட்டை, காக்கைதீவு ) | உதயதாரகை சனசமூக நிலையம். |

- கூட்டம் ஆரம்பமாகும் நேரம் 1994·12-05 மு.ப. 11.00 மணி
- நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் நேரம் 1994-12-05 பி.ப. 12.00-1.00மணி
- ஆட்சேபனை ஏற்கும் நேரம் 1994-12-05 பி.ப. 1 00-2.00மணி
- தேர்தல் நடைபெறும் நேரம் 1994-12-05 பி.ப. 2.00-4.00மணி வரை

வி. கே. அருந்தவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்

(10287)

## இடமாற்றம்

மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றம்

**திருஞானாஸ்** அன்கோ

சேட்டிபையிட் எக்கவுண்டன்ஸ்
சாட்டட் எக்கவுண்டன்ஸ்
பதிவு செய்த எண்பார்வையாளர்
அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்
வருமான வரி ஆலோசகர்

**திருஞானாஸ் கட்டிடம்**
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(10272)

# BITSMANS
## கல்வி நிறுவனம்
மானிப்பாய்

**95** ஆம் கல்வி ஆண்டுக்கான
3 முதல் 11 வரை

வகுப்புகளுக்கான சகல பாடங்களும் எமது வழமையான "*Super Grade*" ஆசிரிய குழுவினால் ஆரம்பமாகின்றன.

★ விஞ்ஞானம்
J. R. சூரி
ராஜகோபால்
சுபா

★ கணிதம்
இரா. அருட்செல்வம்
கனகசுந்தரம்
சிவகுமார்

★ தமிழ்
★ சமயம்
என். பாலா
தர்மா

★ சமூ. கல்வியும் வரலாறும்
என். ராஜன்

★ ஆங்கிலம்
★ ஆங்கில இலக்கியம்
தெய்வதவபாலன்
M. A. ஹரி
கிருபாகரன்

★ வர்த்தகமும் - கணக்கியலும்
என். ராஜன்

★ சித்திரம்
எதிர்வீரசிங்கம்

**ஆரம்பம்: 05-12-1994**
திங்கள் 1 00 மணி (சி-10832)


யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்.



## 15 வயதிற்கு கீழ்ப்பட்டோர் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

# நாவாந்துறை றோ. க. பாடசாலை சம்பியன் பட்டம் வென்றது

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 15 வயதுக்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.



வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்ட நாவாந்துறை றோ. க. வித்தியாலய அணியினர்.

3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தை எதிர்த்து ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அணி மோதியது.

போட்டி ஆரம்பமானது முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாகவே இருந்தது 15 வயதுக்கு உரித்தான சராசரி உயரத்தைவிட சிறிய தோற்றத்தைஉடைய வீரர்கள் இரு அணிகளிலும் இடம் பெற்றிருந்தமையும், அவர்கள் பிரமிக்கத்தக்க வகையில் ஆடியமையும் ரசிகர்களின் நெஞ்சங்களை தொட்டன.

ஆட்டத்தின் முதல் பாதியில் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலய அணி சார்பில் நவசீலன் முதல் கோலையும் இரண்டாவது பாதியில் பிரதீப் போட்ட கோலையும் கொண்டு சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் 2-0 என வெற்றி கொண்டு 3-ம் இடத்துக்கான வெற்றிக்கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டது.

கடந்த வருடம் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தம்மை இணைத்துக்கொண்ட இவ் இரு அணிகளும் அரை இறுதிப் போட்டிவரை தமது திறமையை உயர்த்தி காட்டியதன் மூலம் உதைபந்தாட்டத்தில் தமக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

3-ம் இடத்துக்கான போட்டிக்கு மத்தியஸ்தராக ப. முருகவேல் கடமையாற்றினார். செ. வைத்தீஸ்வரன் து.குகன் ஆகியோர் உதவி நடுவர்களாக கடமை புரிந்தனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது இரண்டாவது இடத்தை தெரிவு செய்வதற்கான ஆட்டம் ஆரம்பமாகின. இதில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தை எதிர்த்து உரும்பிராய் இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் தொடங்கியவுடனே இருபகுதியும் வேகமாக ஆடத் தொடங்கின. நாவாந்துறை றோ.க அணியினர் அனுபவம் மிக்க வீரர்களைப்போல் பந்தினை தமது வீரர்கள் இடையில் பரிமாற்றம் செய்து விளையாடியது குறிப்பிட வேண்டியதாகும்.

ஆட்டம் தொடங்கி ஐந்தாவது நிமிடத்தில் நாவாந்துறை றோ. க. அணி வீரர் சூ. சுகிர்தன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார் இதன் பின் உரும்பிராய் இ.க. அணியினர் மிக அழுத்தம் கொடுத்து நெருக்கத் தொடங்கினர் இருந்தபோதும் நாவாந்துறை றோ.க அணி பிற்காப்புவீரர்கள் கோல் போடும் முயற்சியை தடுத்த வண்ணம் இருந்தனர் மீண்டும் 15-வது நிமிடத்தில் றோ க அணிவீரர் ஞா. ஜேசுதாசன் தனது அணிக்கான இரண்டாவது கோலைப் போட்டார். இடைவேளையின்போது 2-0 என்ற நிலையில் றோ.க. அணி முன்னணி வகித்தது. மீண்டும் இடைவேளையின் பின் உரும்பிராய் இந்துக் க. அணியினர் திறமையாக தமது கட்டுப்பாட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சம்பியன்களான நாவாந்துறை றோ. க. அணியுடன் ஒரு சந்திப்பு

91-ம் ஆண்டுக்கான லெப். கேணல் இம்ரான் நினைவுச் சுற்றுக்கிண்ணத்தை பெருமையுடன் தமதாக்கிக்கொண்டவர்கள் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தினர்; கடந்த செவ்வாயன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 15 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் தம்முடன் மோதிய உரும்பிராய் இந்துக் கல்லூரியை 3-0 என்றவகையில் மேவி இப்பெருமையைப் பெற்றார்கள் இவர்கள்.

இவ்வெற்றி வீரர்களைச் சந்திக்கும் முகமாக இவர்களின் வித்தியாலயத்திற்குச் சென்றிருந்தோம். இளம்வீரர்கள் மீளவும் சீருடை தரித்து எமக்காகக்காத்திருந்தனர். அதிபர், பயிற்றுநர் மற்றும் திரு. நகுலநாதன், திரு. ஜெயரெட்ணராசா எல்லோரும் எம்மை மிக அன்பாக வரவேற்றனர் பயிற்றுநர் திரு. அ. யோசன் ஆசிரியரிடம் முடிவுற்ற ஆட்டங்கள் பற்றி விசாரித்தோம். யாழ். கோட்டத்தில் அடங்கும் தாங்கள் மொத்தம் 14 ஆட்டங்களில் பங்கு கொண்டதாகக் கூறினார்.

''லீக்முறையில் அமைந்த போட்டிகளில் நாங்கள் முதலிடம் பெற்றோம். அதைத் தொடர்ந்து விலகல் முறையுடன் அரை இறுதிப்போட்டிகள் ஆரம்பமாகின. இப்போட்டியில் நாம் யாழ். சென் ஜேம்ஸ் ம. வித்தியாலயத்தை வென்றோம் இறுதியாட்டத்தில் கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலயத்தைச் சந்தித்து 3-0 என்றவாறு வெற்றி கண்டோம் இதைத்தொடர்ந்து மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டோம். மாவட்ட நிலையில் 32 பாடசாலைகள் பங்குகொண்டன. இவை 8 பிரிவாக ஆட்டங்களில் போட்டியிட்டன. அடுத்தகட்டமாக 16 அணிகள் தெரிவுசெய்யப்பட்டபோது விலகல் முறையும் ஆரம்பமாயிற்று இக்கட்டத்தில் மீண்டும் கொழும்புத்துறை புனித. யோசப் வித்தியாலயத்தை (5-0) வென்று கால் இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயாக்கல்லூரியை (3-0) வென்று அரையிறுதி ஆட்டத்தில் ஏழாலை சிறிமுருகன்வித்தியாலயத்தை (2-0) வென்று இறுதியாட்ட

**நிர்மலன்**

த்துக்குத்தகுதி பெற்றோம்' என்றுசுருக்கமாகக் கூறிமுடித்தார்.

உங்கள் பிள்ளைகளின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தவை எவை என பயிற்றுநரை வினவினோம், ''Stamina வை வளர்த்தெடுத்தல் Ball Controling விளையாட்டு ஒழுங்கு விளையாட்டு நுட்பங்கள் - இவ்வாறாக ஒரு ஒழுங்கு முறையிலேயே பயிற்றுவித்தேன். இதோடு கடினமான வாழ்நிலையில் இருந்து வரும் பிள்ளைகள் இவர்கள். ஆனால் இவர்களின் ஆர்வம், பணிவு, பெற்றார்களின் ஒத்துழைப்பு எல்லாமே வெற்றிக்குக் காரணம். அதோடு கிராம மக்களின் தணியாத ஒத்துழைப்பும், முக்கியமானது என்கிறார்.''

அமைதியாக அமர்ந்திருந்த அதிபர் திரு. ஜே ஜேசுதாசனைப் பார்த்தோம்.

''சகல வீரர்களும் எமது நாவாந்துறைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே. எமது பயிற்றுநர் மிகுந்த அனுபவசாலி திறமைசாலி ஆகவே பயிற்றுநரைத் தேடி வெளியில் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நான் விளையாட்டுத்துறையில் விசேட பயிற்சி பெற்றவன். ஆனால் பயிற்றுநரின் உயர் தரம் எனது தேவையைத் தேவையற்றதாக்கி விட்டது''

அதோடு எமக்கென மைதானம் இல்லாதபோதும் மிகுந்த அன்புடனும், உரிமையுடனும் மாணவர்களைப் பயிற்றுவிக்க மைதான அனுமதியளித்த சென். மேரிஸ், சென். நிக்கலஸ், கலைவாணி கழகங்களை மிக நன்றியுடன் நினைவு கூருகின்றோம்'' என்கிறார்.

ஒரு பந்து 1200க்கு மேல். நீங்களோ வசதி குறைந்த பாடசாலையைச் சேர்ந்தவர்கள் என்ற முக்கியமானதொரு விடயம் பற்றி பேச்சுக் கொடுத்தோம். ஆசிரியர் நகுலநாதன் இதற்குப் பதிலளித்தார். ''பாடசாலை அபிவிருத்திச் சபை எமக்கு ஓரளவு உதவியது. மேலும் பாடசாலை வசதிக் கட்டணம் போன்றவற்றையும் ஓரளவு பயன்படுத்தினோம். முக்கியமாக அதிபர் எதுவித தயக்கமும் இன்றித் தனது பணத்தைச் செலவழித்துள்ளார். அடுத்தடுத்த மாதங்களில் அவர் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாவார் என்பது நிச்சயம்'' என்கிறார்.

''அதிபரின் பங்களிப்பு எல்லா வகையிலும் உச்சம் தான். அதிகாலை 6 மணிக்கு



அவர்என்னுடன் மைதானத்தில் நிற்பார், எமக்கு எது தேவையோ அதனை உணர்ந்தே செய்தவர் அவர். அதே போலத்தான் ஆசிரியர்கள் ப. ஜெயரட்ணராசாவும், ந. நகுலநாதனும். நாங்கள் ஒரே அணியாக இணைந்தே இந்த பெருமையைப் பெற்றோம்'' என்கிறார் பயிற்றுநர்.

ஆசிரியர் ஜெயரட்ணராசாவுடன் உரையாடும்போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

### - சாதனை வீரர்கள் -

**கோல்காப்பு**
இ இராஜேந்திரன்
ச. யோசப்

**பின்காப்பு**
நா. சசிக்குமார்
செ. மதியழகன்
அ. .உ அருள்மாறன்

**மத்தியவரிசை**
ச. அ. றொபின்சன்
கி. சுமன்ராஜ்
ம. றீகன்
அ. நேசநாயகம்
க. பெ. எ. டன்சன்
ம. செ. மாக்கஸ்

**முன்வரிசை**
நீ. யூட்டொரிங்ரன்
சூ. சுகிர்தன்
ஞா. யேசுதாசன் (பீம்சிங்)
தி. றெஜினோல்ட்
ஜே. ஜெயகுமார்

யாழ். மாவட்ட பாடசாலை விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்த

# இறுதிப் போட்டி வரை முன்னேறிய

கடுமையானதா? என நாம் வினாவிய போது,

டொறிங்டன், வின்சன் போன்றோர் திறமையாக

# இறுதிப் போட்டி வரை முன்னேறிய உரும்பிராய் இந்துக்கல்லூரி அணி



இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியினர்.

யாழ். மாவட்ட பாடசாலை விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்டோர் பிரிவிற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றது யாழ். உரும்பராய் இந்துக்கல்லூரி அணி.

இந்த அணியை ஈழநாதம் விளையாட்டரங்கு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்து முகமாக விளையாட்டரங்கு சார்பில் நிர்மலனுடன் நானும் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் பாடசாலை அதிபர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர், பயிற்றுனர், வீரர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

கோப்பாய் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் ஐந்து புள்ளிகளுடன் முதலாம் இடத்தை பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளோம் என இறுதிப் போட்டிக்குத் தயாரானது பற்றி விளையாட்டு பொறுப்பாசிரியர் திரு. பகபதி தெரிவித்தார்.

மேலும் அவர் விளக்குகையில்-

மாவட்டப் போட்டிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியையும் கரணவாய் பொன்னம்பலம்வித்தியாலயத்தையும் வெற்றிகொண்டு அரை இறுதி போட்டியில் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்தை வென்று போட்டிக்குத் தகுதி பெற்றோம்.

இறுதிப் போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எமது அணியை வெற்றி கொண்டதால் இரண்டாம் இடத்தைப் பெற வேண்டி வந்தது என்றார்.

மேலும் அணிக்கு வீரர்களை இல்ல விளையாட்டுப் போட்டிகளின் மூலம் சிறந்த பெறுபேறுகள் பெறும் வீரர்களைப் பயிற்றுவிப்பதாகவும் பிள்ளைகள் பின் தங்கிய கிராமங்களிலிருந்து படிக்க வருகிறார்கள் என்றும் அவர்களின் உடல் வளர்ச்சி போதிய போசாக்கின்மையால் பாதிப்படைந்திருப்பதனால் விளையாட்டின் போது மிகவும் களைப்படைந்து விடுகிறார்கள் என்றும் கூறினார்.

தாம் சாம்பியன் கிண்ணத்தை இழந்ததற்கு இதுவும் ஒரு காரணம் ஆகலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அணிக்கு பொருளாதார வசதிகள் குறிப்பிட்ட நலன் விரும்பிகளிடமிருந்து கிடைக்கப்பெறுவதாகவும் பாடசாலை ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் பல உதவிகளை செய்துள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மற்றும் பயிற்றுனர் தமது பந்தினையே கொண்டுவந்து பயிற்றுவித்ததோடு பண உதவிகள் புரிந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை அபிமானிகள் வீரர்களுக்கு சிற்றுண்டிகள் போன்றஉணவுகள்வழங்கி உதவிகள் செய்தனர்எனவும்அவர் தெரிவித்தார்.

போட்டிகளில் கலந்து கொள்வதற்காக தூர இடங்களுக்கு சிறிய வீரர்களே ஆசிரியர்களை ஏற்றிச் செல்கின்றனர்.

ஒரு முறை ஒரு போட்டியில் கலந்து கொள்வதற்காக தமக்கு போட்டி நடைபெறும் மைதானம் சரியாக அறிவிக்கப்படாததால் தாம் கொட்டும் மழையிலும் பிள்ளைகளை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு அலைந்ததாகவும் (மானிப்பாய் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். பல்கலைக் கழகம், யாழ். இந்துக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி) மத்திய கல்லூரியில் வைத்து ஆட்டம் மறுநாளுக்கு ஒத்தி வைக்கப்பட்டதாகவும் சொன்னார்.

இக் கல்லூரி 10 வருடங்களின் பின் இம்முறை திறமையான அணிகளை உருவாக்கி உள்ளது. இவ் வளர்ச்சிக்கு நான், திரு. ஜெயராஜா, நரேந்திரன், மா சிலாமணி, கோகுலன் போன்ற ஆசிரியர்கள் முக்கிய பங்காற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, இவ்வணி பயிற்றுனராக திரு. வெள்ளையும், சின்ராசாவும் கடமையாற்றி இருந்தனர். திரு வெள்ளையுடன் பேசியபோது-

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எமக்கு முழு ஒத்துழைப்பையும் நல்கியிருந்தனர் குறிப்பாக வீரர்கள் கட்டுப்பாடு மிக்கவர்கள் எம்மை மதித்து சலிக்காமல் சகல பயிற்சிகளும் செய்தார்கள்.

அடுத்த ஆண்டு ஆரம்பத்திலிருந்தே கூடிய பயிற்சி எடுத்து சிறந்த அணியாக உருவாக்க உள்ளதாக தெரிவித்தார்.

( எஸ். தயாபரன் )

இக் கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் பசுபதி அவர்கள் வசாவிளான் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும்போது அவரின் மாணவராக திரு. வெள்ளை இருந்துள்ளார். அத்தொடர்பின் மூலமே இக் கல்லூரிக்கு இவர் பயிற்றுனராக நியமிக்கப்பட்டார்,

இக் கல்லூரியில் சேவை மனப்பான்மை உடன் திரு. வெள்ளை கடமை புரிந்து வருகின்றார்.

இந்த அணி வீரர்களுடன் உரையாடியபோது, இளம் வயதுச்சிறார்கள் என்பதால் அவர்கள் கூச்ச உணர்வுடனேயே பேசினர்,

நீங்கள் சந்தித்த போட்டிகளில் உங்கள் அனுபவம் என்ன? போட்டிகள் கடுமையானதா? என நாம் வினாவிய போது,

தாம் ஆடிய ஆட்டங்களில் சரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்துடனும் சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்துடனும் ஆடியஆட்டமே கடுமையானதும் தமக்குமறக்க முடியாதது எனவும் ஏனைய ஆட்டங்களில் தாம் இலகுவாக வெற்றி பெற்றதாகவும் கூறினர்

இறுதியாட்டம் பற்றி கேட்டபோது தாம் இப்போட்டியில் சம்பியனாக வராது போயினும் தமது விளையாட்டுப் பாங்கில் தமக்குத் திருப்தி என்றும் இறுதிவரை நன்றாக விளையாடினோம் என்றும் தெரிவித்தனர்.

மேலும் எதிரணி வீரர்கள் நவாந்துறைறோமன் கத்தோலிக்க வித்தியாலய வீரர்கள் டொறிங்டன், வின்சன் போன்றோர் திறமையாக விளையாடினார்கள்எனமனந்திறந்து கூறினார்கள்.

மேலும். வெள்ளை அண்ணா, சின்னராசா அண்ணாமார்களின் வழிகாட்டலும் காலை - மாலை ஒழுங்கான பயிற்சியுமே தம்மை இந்த நிலைக்கு உருவாக்கியது என்றும் அதிபர் ஆசிரியர்களின் அன்பும் அரவணைப்பும் பக்கபலமாக இருந்ததெனவும் அவர்கள் கூறினார்கள்.

இச்சிறிய வீரர்கள், இனி வரும் காலத்தில் சிறந்தவீரர்களாகத் திகழ்ந்து பல சாதனைகள் படைத்து, இக் கல்லூரி அணியை முன்னெடுத்துச்செல்ல விளையாட்டு அரங்கு சார்பாக வாழ்த்தி புன்னகையுடன் விடைபெற்றோம்.

## அணி வீரர்கள்

பரமேஸ்வரன் வரதராசன் (சிந்து)
அரியராசா கஜென்
சத்தியநாதன் சதீசன்
செல்வராசா சஞ்சயன்
திரவியநாதன் ஜெபர்சன்
இராசதுரை ராஜ்குமார்
சிவபாதசுந்தரம் கோகுலதாஸ்
அந்தோனிப்பிள்ளை ஜெயந்தன்
ஞானராசா தீபன்
மகாலிங்கம் மயூரதன்
பரராசசிங்கம் பிரதீபன்
சிவகுமாரன் யோகி
தங்கப்பிரகாசம் நிஷாந்தன்
நவரத்தினம் சிவதாசன்
சோதிநாதன் கோபிநாத்
இராமச்சந்திரன் சுரேஸ்
ஞானமுத்து பாஸ்கரன்
முத்துலிங்கம் சுமன்

# மே.இந்தியதீவை ஒருநாள்போட்டியில் 4-1 என்ற ரீதியில் இந்தியா வென்றது

அண்மையில் இந்தியாவிற்கும் மேற்கிந்தியா விற்கும் ஐந்து ஒருநாள்சர்வதேசகிரிக்கெற்போட்டி நடந்து முடிந்தது இதில்4-1என்றரீதியில்இந்தியா மேற்கிந்தியாவைவென்றது உலகிலேயே கிரிக்கெற்றில் தலை சிறந்த நாடு மேற்கிந்தியா. சாதனைகள் படைத்த பல வீரர்களைகொண்ட நாடும் மேற்கிந்தியா தான். ஆனால் இந்தியா எப்படி வென்றது. அதற்காக நாம் முற்று முழுதாக இந்தியாவிடம் ஆற்றல் இல்லை என்றும் கூறிவிட முடியாது. இந்தியா மேற்கிந்தியாவை ஒருநாள் போட்டித் தொடரில் வெற்றி பெற்றதும் இதுதான் முதல் தடவையும் கூட. இந்தியா இப்போட்டித் தொடரில் வெற்றி பெற்றாலும் கூட சில சந்தர்ப்பங்களில் தத்தளிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

முதலாவதுஒருநாள் போட்டியின் போது மிக மிக அழுத்தமான நிலையில் இருந்துதான் இந்தியா தோல்வியை சந்தித்தது. பூவா, தலையா பார்ப்பதில் வெற்றி பெற்ற அசாருதீன் மேற்கிந்தியாவை துடுப்பெடுத்தாடும்படி கேட்டுக் கொண்டார். ஆட்டத்தை தொடங்கிய மேற்கிந்தியாவின்துவக்க ஆட்டக்காரர்கள் சிமித்தும், வில்லியமும் முதலாவது இலக்குச் சோடியாக 126 ஓட்டங்களை பெற்றனர். அப்போது வில்லியம் 66 ஓட்டங்கள் பெற்ற போது ஆட்டம் இழந்தார். மொத்தம் 269 ஓட்டங்கள் ஐந்து இலக்கிற்கு என்ற நிலையில் 50 ஓவர்களும் முடிவடைந்தன. அதில் சிமித் 81 ஓட்டங்களும், கூப்பர் 61 ஓட்டங்களும் எடுத்தனர். அன்றைய தினம் இந்தியாவின்பந்துவீச்சு அவ்வளவு சிறப்பாக இருக்கவில்லை. 50ஓவர்களில் 270 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பிரபாக்கரும், ரெண்டுல்காரும் ஆட்டத்தைத் தொடங்கினர். ஒரு ஓட்டம் இருந்த போது ரென்டுல்கார் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார். மளமளவென இந்தியாவின் இலக்குகள் சரிந்து போனது ஒரு நிலையில் 27 ஓட்டங்களுக்கு நான்கு இலக்கு என்று இருந்தது. அப்போது உள்ளே நுழைந்த அட்டுல்படாடே, சித்துவும் இணைந்து இந்தியாவின் அழுத்தமான நிலையை ஒரு நிலைக்கு கொண்டு வந்தார்கள் 126 என்ற நிலையில் இருந்த போது சித்து 52 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். பின்பு படாடே 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார் 5ஆவது இலக்குச் சோடியாக இருவரும் 99 ஓட்டங்கள் எடுத்தனர். பின்பு இந்தியாவின் இலக்குகள் மளமளவென சரிந்து 200 ஓட்டங்கள் கூட எடுக்காமல் இந்தியாவின் சகல இலக்கும் சரிந்தது. இதில் இந்தியா தோல்வியை சந்தித்தது.

இரண்டாவது ஒருநாள் போட்டி இந்தியாவுக்கு ஓரளவு கைகொடுத்தது என்று கூறலாம். பூவா; தலையா பார்ப்பதில் வெற்றி பெற்ற அசாருதீன் மேற்கிந்தியாவை துடுப்பெடுத்தாடும்படி கேட்டுக் கொண்டார். அன்று இந்தியாவின் பந்து வீச்சுக்கள் அகோரமாக இருந்தது. மேற்கிந்தியாவின் இலக்குகள் மளமளவென சாய்ந்தன. ஒரு நிலையில் 30 ஓவர்களில் 6 இலக்கு இழப்பிற்கு 81 ஓட்டம் என்று இருந்தது. கூப்பர் மிகவும் சாதுரியமாக அடித்தாடியதால் மொத்தம் 193 ஓட்டங்கள் 9 இலக்கு என்ற நிலைக்கு வந்தது அதில் கூப்பர் 73 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் சிறீநாத் மிகவும் திறமையாக வீசி 3 இலக்கைப் பெற்றுக்கொண்டார். 194ஓட்டம் எடுத்தால் வெற்றி என்று தொடங்கிய இந்தியா எடுத்த எடுப்பில்இரண்டு இலக்கை இழந்தது. இதிலும் ரெண்டுல்கார் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டம் இழந்தார். வெற்றிப்பாதையை நோக்கிஇந்தியா சென்று கொண்டு இருந்த போது மழை குழப்பியதால் ஓவர்களில் 4 இலக்கிற்கு 137 ஓட்டங்களை பெற்றது இதில் சித்து 65 ஓட்டங்களுடனும் அப்துல் பகாரி 7 ஓட்டங்களுடனும் ஆடிக் கொண்டு இருந்தனர். ஓட்ட விகிதாசார அடிப்படையில் இந்தியாமுன்னணியில் இருந்ததால் இந்தியா வெற்றிபெற்றது என்று அறிவிக்கப்பட்டது.

3-வது போட்டியில்இந்தியா வெற்றிபெற்றது. இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. முதலில் ஆடிய இந்தியா 44 ஓவர்களில் 4 இலக்கு இழப்பிற்கு 260 ஓட்டங்களை பெற்றது. இதில் ரெண்டுல்கார் 52 ஓட்டங்களையும் சித்து 100 பந்துகளில்115ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் பெற்றனர். இதுஇவருடைய ஐந்தாவது சதமாகும். அசாருதீன் 45 ஓட்டங்களை பெற்றார் 261 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை தொடங்கிய மேற்கிந்தியா மிகவும் சிறப்பாக ஆடியது. முதலாவது இலக்கு 81 ஓட்டம் என்ற நிலையில் வில்லியம் 49 - வது ஓட்டத்தில் ரன் அவுட்டானார். சிமித் 57 ஓட்டம் பெற்றார். இதன் பின் இலக்குகள் மளமளவென சரிந்தன. 8இலக்கு இழப்பிற்கு 256 ஓட்டம் என்ற நிலையில் ஓவர்கள் முடிவடைந்தன. இதில் கூப்பர் மிகவும் வேகமாக ஆடி 47 பந்துகளில் 77 ஓட்டங்களைப்பெற்று ஆட்டம் இழக்காமல் இருந்தார். இதில் சிறந்த ஆட்டக்காரராக சித்து அறிவிக்கப்பட்டார்.

நான்காவது போட்டியிலும் இந்தியா வென்றது. இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. முதலில் ஆடிய மேற்கிந்தியா 50 ஓவர்களில் 252 ஓட்டங்களை பெற்றது. இதில் லாறா 87 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இலக்குக்காப்பாளரால் 'ஸ்ரம்' செய்யப்பட்டு வெளியேறினார். அத்தர்டனும் லாறாவும் சேர்ந்து 4வது இலக்குச் சோடியாக 91 பந்தில் 93 ஓட்டங்களை எடுத்தனர். அத்தர்டன் 37 ஓட்டங்களைப் பெற்றார். கூப்பர் 2 ஓட்டத்தில் 'ரன்அவுட்' என்று அறிவிக்கப்பட்டது. 253 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆடத்தொடங்கிய ரெண்டுல்காரும் அஜே ஜடேஜாவும் மிகவும் சிறப்பாக ஆடி முதலாவது இலக்குச் சோடியாக 176 ஓட்டங்களை பெற்றனர். 37-வது ஓவரில் சிமித்தின் பந்து வீச்சில் ரெண்டுல்கார் 88 ஓட்டம் எடுத்த நிலையில் இலக்கு சரிந்து ஆட்டம் இழந்தார். இந்தியாவின் துவக்க ஆட்டக்காரர்களான சிறீக்காந்தும் ரவிசாஸ்திரியும் சேர்ந்து எடுத்த 188 ஓட்டங்களே இந்தியாவில் அதிகூடியதாகும் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

அஜே ஜடேஜா 104 ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். இது இவரின் முதலாவது சதம் இதில்நான்குகள் நான்கும் ஆறுகள் மூன்றும்அடங்கின. 49.3 ஓவர்களில்இந்தியா இரண்டு இலக்கு இழப்பிற்கு 253 ஓட்டங்கள் பெற்று வெற்றி பெற்றது. சிறந்தஆட்டக்காரராக அஜே ஜடேஜா தேர்ந்து எடுக்கப்பட்டார்.

இறுதிப் போட்டியிலும் இந்தியா வென்றது. அன்றைய தினம் மேற்கிந்திய அணித் தலைவர் கொட்ணிவோல்ஸ் விளையாடவில்லை லாறா' அன்று அணிக்கு தலைமை தாங்கினார். முதலில் ஆடிய இந்தியா 50 ஓவர்களில் 5 இலக்கு இழப்பிற்கு 259 ஓட்டங்களை பெற்றது. ரெண்டுல்கார் 105 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நாள் போட்டியில் இவரின் அதிகூடிய ஓட்டங்கள் 115. இது நியூஸ லாந்துக்கு எதிராகப் பெறப்பட்டது. இது இவருடைய 3-வது சதமாகும் கம்ளி 66 ஓட்டங்களையும் பெற்றார். இரண்டாவது இலக்குச்சோடியாக கம்ளியும் ரெண்டுல்காரும் சேர்ந்து 118 ஓட்டங்களை குவித்தனர். 50 ஓவரில் 260 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தொடங்கிய மேற்கிந்தியா 2 ஓட்டம் எடுத்த நிலையில் சிமித் ஆட்டம் இழந்தார். 47 ஓட்டம் என்ற நிலையில் வில்லியம் 13 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். பின்பு 'லாறா' 47 ஓட்டங்களுடன் ஆட்டம்இழந்தார். அப்போது அணியின் நிலை 90 ஓட்டம் பின்பு 'கூப்பரும் அடமும்' சேர்ந்து 4-வது இலக்குச் சோடியாக 126 பந்துகளில் 125ஓட்டங்களை எடுத்தனர். அப்போது 'அடம்' 50 ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். வெற்றி மேற்கிந்தியா பக்கம் உறுதி என்பது போன்று இருந்தது. எதிர்பாராத விதமாக கூப்பர் எல். பி. டபிள்யூ என்ற முறையில் ஆட்டம்இழந்தார். அவர் பெற்ற ஓட்டம் 84 மிக மிக அழுத்தமான நிலையில் இரு அணியும்இருந்தது. பின்பு மளமளவென இலக்குகள் சாய்ந்தன.

49-வது ஓவரில் 255 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளும் சரிந்தது. இந்தியா 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதில் வெங்கடபதி ராஜீ 63 ஓட்டங்கள் கொடுத்து நான்கு இலக்குகளை கைப்பற்றினார் அன்றைய ஆட்டத்தின் நாயகனாக கால் கூப்பர் தெரிவு செய்யப்பட்டார். ஆட்டத் தொடர் நாயகனாக ரெண்டுல் கார் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த ஆட்டத் தொடர் இந்தியாவிற்கு சிறந்ததொரு சாதனையாகும். இறுதி 3 ஆட்டங்களில், மேற்கிந்தியாவின் வெற்றியைத் தட்டிப் பறித்து இந்தியா தன் வசமாக்கிக் கொண்டது. இதற்கு பிரதான மூன்று துறைகளையும் இந்தியர் தம் வசப்படுத்திக்கொண்டதே முக்கிய காரணம் எனலாம். அதிசிறந்த பந்துத்தடுப்பு, வியூகங்களை உடைத்தும்மே. இந்திய பந்து வீச்சாளர்களை அசர வைத்த துடுப்பாட்டமும், தேவையான போது மே. இந்திய அரண்களை உடைத்த பந்து வீச்சும் என்று கூறிக்கொண்டேசெல்லலாம் இன்னொரு வகையில் கூறப்போனால் அசாருதீன் தன் திறமையான தலைமையினால் தன் கீழ் விளையாடும் சமதையான, இளமையான, மூத்த உறுப்பினர் எல்லோரையும் ஒருங்கிணைந்து ஒரு கட்டுக்கோப்பு நிறைந்த அணியைக்கொண்டு மே. இந்தியரை வீழ்த்தினார் எனலாம். உண்மையில் தற்போதைய இந்திய கிரிக்கெட் அணியினர் தம் நாட்டுக்குப் பெரும் பெருமையைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள்.

நீர்வை.

**இ.பாலச்சந்திரன் ரகு**
யாழ். மத்திய கல்லூரி

## சம்பியன்களான

அணி நடந்து கொள்ளவேண்டிய முறை பற்றித் தாங்கள் மிக இறுக்கமாகவே நடந்து கொண்டதாகக் கூறுகிறார்.

இதே கருத்தை அதிபரும் பிரதிபலித்தார்.

''எந்த நிலையிலும் முறை தவறி விளையாடக் கூடாதென்பது எமது கட்டளை. இது எமது எல்லா அணிகளுக்கும் பொதுவான கட்டளை இதனால் நாம் பாதிக்கப்பட்டதும் உண்மை. ஆனால் எமது நேர்மையான எண்ணம்தான் இந்த வெற்றியை எமக்குத் தந்தது''.

இந்த வெற்றி எமது அதிபர் இங்கு வந்த சில காலங்களுக்குள்ளேயே எம்மை வந்தடைந்தது. அதிர்ஷ்டம் மிக்க அதிபரின் கீழ் இன்னமும் எம் மாணவர்கள் பல சாதனைகள் புரிவர்''என்கிறார் ஆசிரியர் ந. நகுலநாதன்.

இவர்கள் எல்லோரும் மிகவும் அன்னியோன்னிய பாவத்துடன் இணைந்துசெயற்படுவதைத் தெளிவாகவே அவதானிக்க முடிகிறது.

இந்த வெற்றிக்கான காரணங்கள் களத்தினுள் மட்டுமல்ல வெளியிலும் நிறையவே காணப்பட்டிருக்கின்றன. இப்போட்டிகளில் யாழ்ப்பாணத்தில் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு அணி இவர்களின் 19 வயதிற்குட்பட்ட அணி. அது இறுதியாட்டத்திற்குத் தெரிவு செய்யப்படாமையின் துயரம் இவர்களில் தெரியத்தான் செய்கிறது. இருந்தும்மாணவருக்குவெற்றி தோல்வியின் பாங்கினை உணரும்அனுபவமாக அதைக் கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

விளையாட்டு வீரர்களிடம் கதைகொடுத்தோம் அவர்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள் ''சேர் சொன்ன புத்திமதிகளை மனதிற்கொண்டே களத்தில் இறங்கினோம். எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. ஆனால், மற்றைய அணிகளின் திறமையை மதித்தே விளையாடினோம். எங்களுக்குச் சவாலாக அமைந்த அணியென்றால் அது நெல்லியடி மத்தியமகாவித்தியாலயம்தான். எங்களை நிறைய நெருக்கினார்கள் தலா 2 கோல் என்ற வாறு சமன் செய்தோம்'' என்கிறார்கள்.

ஜே. ஜெயகுமார் கோட்டமட்டப் போட்டிகள் வரையிலும், மாவட்டமட்டப் போட்டிகளில் கி. சுமன்ராஜும் அணித்தலைவர்களாக விளங்கியவர்கள் எல்லோருமே சிறந்த வீரர்கள் இவர்களைப் பற்றி ரசிகர்களின் கருத்தும் இதுவே இருந்தும் சில வீச்சுக் கூடிய வீரர்களை உதைபந்தாட்ட ரசிகர்கள் இனங்கண்டு வைத்திருக்கிறார்கள். ஞா. ஜேசுதாசன், ரி. யூட் டொரிங்ரன், ஜே. ஜெயகுமார், கி. சுமன்ராஜ். தி. றெஜினோல்ட். றெஜினோல்ட் மட்டும் தனித்து தன்பாங்கில் 15க்கு மேற்பட்ட கோல்களைக் குவித்துள்ளார். இந்த அற்புதமான மிக இளம் வீரர்களை உதைபந்தாட்ட ரசிகர்கள் எல்லோர் சார்பாகவும் வாழ்த்தி அவர்களிடம் இருந்து விடைபெற்றோம்.

## நாவாந்துறை

டுக்குள் பந்தினை வைத்திருந்து ஆடியபோதும் திறம்பட முடிக்கும்தன்மை (Finishing) இல்லாததால் கோல்களைப் போட தவறினர். மீண்டும் இடைவேளையின் 10-வது நிமிடத்தில் நாவாந்துறை றோ. க. வீரர் தனது அணிக்கான 3-வது கோலையும் போட்டு தமது வெற்றியை உறுதிப்படுத்தினார். 3-0 என்ற வகையில் உரும்பிராய் இந்து அணியை வெற்றி கொண்டு லெப். கேணல் இம்ரான் சுற்றுக்கிண்ணத்தைத் தட்டிச் சென்றனர். மிகவும் இளம் சிறார்களான இவ்இரு அணி வீரர்களும் ரசிகர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் மிகவும் தரமான ஆட்டம் ஒன்றை ஆடியிருந்தனர். மேலும் இப்பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்ற உரும்பிராய் இந்துக் கல்லூரியைத் தவிர ஏனைய மூன்று இடத்தையும் பெற்ற அணிகள் பின்தங்கிய சிறிய பாடசாலைகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தராக திரு. ஆர். சிறிதரன் அவர்களும், உதவி மத்தியஸ்தராக திரு. பா. கிருபாகரனும், ஆர். தனராஜரட்ணம் அவர்களும் கடமையாற்றியிருந்தனர்.

## ஆசிய விளையாட்டுப் போட்டி

னாரி டாகாஓகா தங்கப்பதக்கம் பெற்று யப்பானின் பெருமையை உயர்த்தி விட்டார். 400 மீ, 1500 மீ இரண்டிலும் கட்டார் நாட்டைச்


தோல் (LEATHER) விற்பனைக்கு

தாவரப்பதனிடுதல் முறையிலே பதனிடப்பட்ட ஆட்டு, மாட்டுத் தோல்கள் தற்போது பரபரப்பாக விற்பனையாகின்றன

## ஆசிய விளையாட்டுப் போட்டி

# தென் ஆசிய நாடுகள் இம்முறையும் சோபிக்கத் தவறி விட்டன

முன்னணி நாடுகளின் பதக்கப்பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 137 | 92 | 60 | 289 |
| தென் கொரியா | 63 | 53 | 63 | 179 |
| யப்பான் | 59 | 68 | 80 | 207 |
| கஜாகிஸ்தான் | 25 | 26 | 26 | 77 |
| உஸ்பெகிஸ்தான் | 10 | 11 | 19 | 40 |

தென்னாசிய நாடுகளின் நிலை

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| இந்தியா | 4 | 3 | 15 | 22 |
| பாகிஸ்தான் | 0 | 4 | 6 | 10 |
| வங்காளதேசம் | 0 | 1 | 0 | 01 |
| நேபாளம் | - | - | 2 | 02 |
| சிறிலங்கா | - | 1 | 1 | 02 |
| பூட்டான் | - | - | - | - |
| மாலைதீவுகள் | - | - | - | - |

அழிவிலிருந்து மீண்டும் உன்னத நிலைக்கு உயரமுடியும் என்று 12-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடாத்திய யப்பான் இன்னொரு முறை நிரூபித்துள்ளது. இதற்கு சான்றுபகர்வதுபோலவே இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அணுகுண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகிச் சீரழிந்த ஹிரோஷிமா நகரத்தில் இப்போட்டிகளை மிக ஆடம்பரமாகவும் அதேவேளை வெற்றிகரமாகவும் யப்பான் நடத்திக்காட்டியுள்ளது. இதேவேளை இன்னொரு புறம் சீனாவின் விளையாட்டு ஏகபோகத்தை இனியும் உடைப்பது இயலாதது என்பதையும் யப்பான் உணர்ந்திருக்கும். ஆனால் யப்பானின் ஆதங்கம் இன்னொருவகையில் அமைகிறது. தொடர்ந்தும் மூன்றாவது முறையாகவும் தென்கொரியாவிற்கு அடுத்து மூன்றாமிடத்தில் நிற்கவேண்டியிருக்கிறதே என்பதே அது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விளையாட்டுலகில் யப்பானைவிட எம்மால் முடியும் என்பதை கடந்த மூன்று சந்தர்ப்பத்திலும் தென்கொரியா நிரூபித்துவிட்டது. இதேவேளை சீனா கடந்த ஆசிய போட்டிகளில் தான் கொண்டிருந்த ஏகபோகத்தைச் சிறிது தளரவிடவேண்டிய நிலைக்குள்ளாகியிருக்கிறது. அதேபோல யப்பானும் தன் பதக்க எண்ணிக்கையில்சிறிதுவீழ்ச்சியைக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் புதிதாகப் பிறந்த நாடுகள் ஐரோப்பிய வலயத்தில் இருந்து விலகி ஆசிய நாடுகளாகப் பரிமளித்துள்ளமையே. மத்திய ஆசிய நாடுகளான கஜாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் இரண்டும் முறையே நான்காம், ஐந்தாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் சீன, தென்கொரிய, யப்பானிய நாடுகளின் தங்கப்பதக்கங்களையும் தட்டிப்பறித்துள்ளன இந்நிலையில் ஏனைய ஆசிய நாடுகள் இவ்வைந்து நாடுகளும் மொத்தமாகப் பெற்ற பதக்கங்களுடன் ஒப்பிடும் போது ஏதோ மிஞ்சியதில்ஒன்றிரண்டைப் பெற்றுக் கொண்ட நிலையில் காணப்படுகின்றன. முதல் ஐந்து நாடுகளும் பெற்ற மொத்தத் தங்கப்பதக்கங்கள் 294 ஏனைய முப்பத்தேழு நாடுகள் பெற்றவை 46 மட்டுமே. இவற்றுக்குள் இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா, போன்ற மக்கள் தொகை அதிகமான நாடுகளும் அடங்கும்.

ஏழாயிரத்து முந்நூறு போட்டியாளர் கலந்து கொண்ட ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வழக்கமாக கதாநாயகன், நாயகிதெரிவு செய்யப்படும் ஒரு மரபு இவ் வகையில் தென் கொரிய மரதன் ஓட்ட வீரர் குவாங் யங்-ஜோ கதாநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார் இவர் 1992 ஒலிம்பிக் வெற்றி வீரரும் கூட பெண்கள் வரிசையில் சீனாவைச் சேர்ந்த 15 வயதுடைய ஜிம்னாஸ்டிக் வீராங்கனைமுன்னணிவீராங்கனையானார். மரதன்வீரர் குவாங் ய-ங் ஜோ கதாநாயகனாக தெரிவு செய்யப்பட்டாலும் அவருக்கு இணையாக எல்லோராலும் பேசப்பட்டவர் கட்டார் நாட்டைச் சேர்ந்த டலால் மன்சூர். இவர் மூன்றாவது முறையாக தொடர்ச்சியாக ஆசியாவின் வேகமான மனிதராக 100 மீற்றர் ஓட்டத்தை வென்றதன் மூலம் தன்னை நிருபித்தார். அதைவிட200 மீற்றர்ஓட்டத்திலும் இவரே தங்கப் பதக்கம் பெற்றவர். ஆசியப், போட்டிகளில் 100 மீ, 200 மீ இரண்டிலும் தங்கப்பதக்கம் பெற்ற நான்காவது வீரராக இவர் திகழ்கின்றார் 1951-ல் ஒரு இந்தியரும் 66-ல் மலேசியரும் 74-ல் தாய்லாந்து வீரருமே இச் சாதனை புரிந்த மூவராவர். பளுதூக்கும் போட்டியில் சீனப் பெண்கள் 9 பிரிவுகளிலும் முதலிடம் பெற்றதோடு, அதில் ஆறில் உலகசாதனையும் படைத்துவிட்டார்கள். சீனர்கள் நீச்சல் போட்டியில் பெற்ற பதக்கங்கள் மொத்தம் 23, இதில் 15 பெண்கள் பெற்ற தங்கப் பதக்கங்கள். மல்யுத்தப் போட்டியில் தென்கொரியா 8 தங்கப் பதக்கள்களை வெல்ல மிகுதி இரண்டையும் கஜாகிஸ்தான் வென்றது. ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் சீனப் பெண்களின் ஆதிக்கத்தை முறியடிக்க ஏனைய நாடுகளால் முடியவில்லை

## நிர்மலன்

உலக சாதனைகள் என்ற வகையில் 25 உலக சாதனைகள் பன்னிரண்டாவது ஆசியப் போட்டிகளில் முறியடிக்கப்பட்டுள்ளன: அம்புஎய்தலில் 2, துப்பாக்கிசுடுதல்2, நீச்சல்1, பளுதூக்குதல் 20 என்றவாறு இவை அமைகின்றன. ஆனால் 1990 பீஜிங் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அம்பெய்தலில் 6-ம், சைக்கிளோட்டத்தில்1-ம் என ஏழு உலக சாதனைகள் மட்டுமே முறியடிக்கப்பட்டிருந்தன. இத்தரவானது அடுத்து வரும் அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளில் ஆசியக்கண்டத்திற்குச் சிறிது கூடுதல் தங்கப்பதக்கங்கள்கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

மரதன் ஓட்டப்போட்டி யப்பானில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டதொன்றாயினும் அதனை தென்கொரியா தட்டிக் கொண்டு போய்விட்டது. இருந்தாலும் 5000 மீ, 10000 மீற்றர் இரண்டுநீண்டதூர ஓட்டங்களில் டொசினாரி டாகாஒகா தங்கப்பதக்கம் பெற்று யப்பானின் பெருமையை உயர்த்தி விட்டார். 400 மீ, 1500 மீ இரண்டிலும் கட்டார் நாட்டைச் சேர்ந்த இப்ராகிம் இஸ்மாயிலும், மொகமட் சுலெய்மானும் தங்கப்பதக்கத்தை தட்டிக் கொண்டார்கள். 800 மீற்றரில் கொரியாவின் லீ-ஜின் இல் தங்கப் பதக்கம் பெற்றார்.

சீனாவைப் பற்றிய இன்னொரு குறிப்பையும் இங்கு குறிப்பிட முடியும் முறையே 97,99 ம் ஆண்டுகளில் சீனாவுக்குச்சொந்தமாகப் போகும் சிறியதீவுகளானகொங்கொங் மக்காவ் இரண்டும் பெற்றுக்கொண்ட வெள்ளி, வெண்கல பதக்கங்களின் எண்ணிக்கை மொத்தம் 14 ஆகும். எனவே எதிர்காலத்தில் சீனா இன்னமும் பலம் பெறப் போகின்றது

இங்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஒரு சில விளையாட்டுகள் பற்றிய குறிப்புகளுடன் பொதுவான நிலைமை பற்றியும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் கிழக்காசியாவின் மேலாதிக்கத்தன்மை இங்கு நன்கு புலனாவது மட்டுமன்றி மத்திய ஆசிய புதிய நாடுகளின் எடுப்பான பிரவேசமும் தெளிவாகவே புலப்படுகின்றது. இதேவேளை ஒப்பீட்டு ரீதியில் தென் ஆசிய, தென்கிழக்கு ஆசிய நாடுகளைவிட மேற்காசிய நாடுகள் (எண்ணெய்வள நாடுகள்) பலமிக்கவையாகத் தோன்றுகின்றன. மிகவும் பலம்குன்றிய நிலையில் தென்னாசிய நாடுகளேகாணப்படுகின்றன. எமது பிராந்தியமான தென் ஆசிய நாடுகள் தம் திறமையைக் காட்டுவதாயின் 'சார்க்' விளையாட்டுக்கள் போன்ற பிராந்தியப் போட்டிகளில்தான் சோபிக்க முடியும். இந்நிலையில் ஒலிம்பிக் நிலையில் இவை சிறந்த பதிவுகளை ஏற்படுத்த இன்னும் எவ்வளவு காலம் தேவை? அந்நிலைக்கு சிறிதளவாவது உயர எந்தளவு முயற்சிகள் தேவை? விவாதம் சுவையாக மிகநீண்ட காலத்திற்குத் தொடரும் என்றுதான் கூற இயலும்போலத் தெரிகின்றது


தாவரப்பதனிடுதல் முறையிலே பதனிடப்பட்ட ஆட்டு, மாட்டுத் தோல்கள் தற்போது பரபரப்பாக விற்பனையாகின்றன

தேவைக்கு நாடுங்கள்!

தோல் பதனிடுதல் பிரிவு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

தாவடி

(சி-10833)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
24-06-1964

உதிர்வு
04-12-1993

### திருமதி மேரி ஆன் யோகறஞ்சினி

சென். யோண் புவிராசசிங்கம்

(முல்லைத்தீவு பிரபாகர் பார்மஸி முன்னாள் உரிமையாளர்)

"இன்று உறவு நாளை பிரிவு
மனிதன் வாழும் நாட்டிலே
என்றும் அழியா உறவு உண்டு
இறைவன் வாழும் வீட்டிலே"

அன்பின் ஊற்றாய் விளங்கி எம்இதயத்தின்அழியா ஓவியமாகத் திகழ்கின்றாய், உன் ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்.

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு. (10263)

கணவர், பிள்ளைகள்,
உறவினர்.

யாழ்ப்பாணம்
தமிழர் ஆவண நூலகம்.



சிந்தனைக்கு

கொல்லைப்புற வேலிக்கு அப்பாலிருந்து புன்சிரிப்பு செய்பவன் ஆனால் வேலி தாண்டி வராதவனே நல்ல அண்டை வீட்டுக்காரன்

-ஆர்தர் பேயர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## 'இந்திய நட்பு'

சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கமானது தனது முக்கிய நட்பு நாடாக இந்தியாவை வைத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்துவதாகவுள்ளது. அதாவது, தனது வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவிற்குச் சிறப்பிடம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. இதனை அதன் நடவடிக்கைகளும் தெளிவாகவே ஊர்ஜிதப்படுத்துகின்றன.

இந்தவகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் முதலாவது விஜயமும், இந்தியாவிற்கானதாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது, இது பெரும்பாலும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ள 'சார்க் உச்சி மாநாட்டுடன் ஒட்டியதாகவே இருக்கும் என ஊகிக்கப்படுகின்றது'.

இதற்கு முன்னோடி நடவடிக்கைகளில் ஒன்றாகவே வெளியுறவு அமைச்சர்லக்ஷ்மன் கதிர்காமரின் அடுத்த வார இந்திய விஜயமும் அமையலாம் எனக் கூறலாம். அத்தோடு,வெளியுறவு அமைச்சர் கதிர்காமரும், இந்தியாவுடன் சிறந்த நட்பு பாராட்ட சிறிலங்கா விரும்புவதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

இந்தியாவுடனான தற்போதைய உறவு பற்றிக் குறிப்பிட்ட லக்ஷ்மன் கதிர்காமர், 'பிரேமதாசா காலத்தின் பின் இவ்வுறவு மேம்பாடு அடைந்து வருவதாகவும்,தற்பொழுது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முன்னைய ஆட்சியில் இருந்தது போன்று மிகவும் சிறந்த நிலையில் உள்ளது' எனக்குறிப்பிட்டார்.

இந்தவகையில் இந்தியாவுடனான உறவிற்கு புத்துயிர்ப்புக் கொடுப்பதில் பொ.ஐ.முன்னணி அரசாங்கம் தீவிர அக்கறை காட்டுவதாகவே உள்ளது. அண்டை நாடு ஒன்றுடன் நட்புறவுடன் இருப்பது என்பது விரும்பத்தக்கது தான். ஆனால் அந்நட்புறவானது இலங்கையின் உள்விவகாரங்களைப் பொறுத்துப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் மட்டுமே நன்மைபயக்கக்கூடியதாகும்.

தென்னாசிய நாடுகளைப் பொறுத்து இந்தியா

# இந்திய பிரமை தமிழரிடையே அகலும்போது சிங்கள புத்திஜீவிகளிடம் புதிதாக தோன்றுகிறது

## கருத்தரங்கில் புதிய ஜனநாயக கட்சியின் செயலர்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இரகசியமாக நடைபெறுவதன் மூலம்சாதகமான முடிவுகளை விரைவில் எடுக்க முடிவதுடன் அநாவசிய தலையீடுகள், விமர்சனங்கள் என்பவற்றை இதனால் தவிர்த்துக்கொள்ள முடியும். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையின் முடிவுகள் நிச்சயமாக மக்களின் முன் அங்கீகாரத்திற்கு விடப்படவேண்டும். இவ்வாறு கொழும்பு பல்கலைக் கழக சிரேஷ்டசட்ட விரிவுரையாளர் வி. ரி. தமிழ் மாறன் வெள்ளவத்தை கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

சமகால உலகில் சமாதான முயற்சிகள் என்ற தலைப்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஐரிஷ் விடுதலைப் போராட்டத் தலைவர் ஜெரி அடம்ஸ் பெரும் பயங்கரவாதியென ஒருபோது வர்ணிக்கப்பட்டவர். பிரித்தானிய பிரதமர் இந்த ஐ. ஆர். ஏ. போராளியுடன் சந்தித்து சமாதானம்பேசியதுஒப்பந்தம் முடிவுக்கு வரும்வரை எவருக்கும் தெரியாது.

சமாதான முயற்சிகள் ஏற்படும் போது பயங்கரவாதிகள் என்று பிரித்து பார்ப்பதோ பட்டம் சூட்டுவதோ எதுவித பயனும் தரமாட்டாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவேண்டும். ஏதோ ஒரு தீர்வை அல்லது முடிவை ஏற்படுத்துவதற்கான ஒருவழியாகவே யுத்தம் நடைபெறுகின்றது.

சமாதானத்தின் மூலம் தான் நல்லதொரு தீர்வை காண முடியுமென உலக வரலாறுகள் கூறுகின்றன. இரண்டாவது உலகப் போரிற்கு பின்பு சமாதானத்திற்கான வழி ஏற்பட்டிருக்கின்றதே தவிர சமாதானம் ஏற்படவில்லை என்றார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய புதிய ஜனநாயகக்கட்சியின் பொதுச் செயலர் சி. கா. செந்தில்வேல், அந்நியருக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட சிங்கள தேசிய வாதம் இனவாதமாக மாறி சிங்கள-முஸ்லிம் கலகமாகி, தமிழ்-சிங்கள கலவரமாக மாறி இன்று அது பேரினவாதமாக வளர்ந்துள்ளது. சிங்கள தேசியவாதம் என்பது பேரினவாத யுத்தமாகி இன்று மக்கள் அகதிகளாகி அல்லல்படும் அளவிற்கு தள்ளி விட்டது.

இந்த பேரினவாத அலை மதவாதிகள், புத்தி ஜீவிகளிடம் மட்டுமன்றிஆயுதப்படையினர் மத்தியிலும் வேரூன்றி விட்டதை நாம்காண்கிறோம் எனவே பௌத்த சிங்கள இனவாதம் என்ற கருத்தியலில் ஜே. ஆர். முதல் டி.பி விஜேதுங்க வரை மக்கள்தவறாக வழிநடத்தப்பட்டதே நாட்டின் சீரழிவுக்கு காரணம் என்பதை நியாயமாக சிந்திப்பவர் எவரும் மறுக்கமாட்டார்கள்.

அயல் நாட்டில் நமது நட்பு சக்தியாக இருக்கவேண்டிய இந்தியா தென் ஆசியாவில் தனது பிராந்திய மேலாதிக்கத்தை வலுப்படுத்த முயற்சிப்பது அவதானிக்கப்பட வேண்டியதாகும். இந்தியப்பிரமை இன்று தமிழரிடையே இல்லாமற் போய்க்கொண்டிருப்பினும் சிங்கள புத்திஜீவிகள்மத்தியில் இந்தப் பிரமைபுதிதாக தோன்றியுள்ளது வேதனைக்குரியதாகும்.

சமாதானம்என்பது தடுக்கப்பட்டபாதையைதிறப்பதோ மின்சாரம் கொடுப்பதோ அல்லதுவவுனியாவிலிருந்து பாதைபோடுவதோ அல்ல. சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வை முன்வைத்து அரசியலமைப்பில் அதற்கான திருத்தம் கொண்டுவந்து நிரந்தர சமாதானம் ஏற்பட இதயசுத்தியுடன் ஈடுபடவேண்டும் என்றார். (86)

# கொழும்பு தலைமையகத்தின் தகவல் மக்களை திசைதிருப்பும் முயற்சி

## யாழ். செஞ்சிலுவை கிளை கண்டனம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையின் நிதி சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக அண்மையில் கொழும்பு தலைமையகத்தினால் வெளியிடப்பட்டதாக வெளியான தகவல்கள் உண்மைக்கு புறம்பானவையெனவும் மக்களை திசைதிருப்பும் வகையில் செய்யப்பட்ட செயல் எனவும் யாழ் கிளை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் கணக்குகளில் காணப்பட்ட திருப்தியின்மையால் கிளைக்கான நிதியுதவியை நிறுத்தியுள்ளதாக கொழும்பு தலைமையகம் அறிவித்ததாக செய்தி வெளிவந்திருந்தது.

இத்தகவலை மறுத்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்;

யாழ் மக்களுக்குஉதவுவதற்கென கொண்டுவரப்பட்டபனடோல் விற்பனை மூலம்கிடைக்கப்பட்ட பணம் ஒழுங்கான முறையில் கொழும்பு தலைமையகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. செலுத்தப்படாத பாக்கிப் பணமாக 8,17,500 ரூபா மட்டுமே உள்ளது.

இதேபோல் வெள்ள நிவாரணமாக கொழும்புத் தலைமையகத்திலிருந்து கிடைக்கப்பட்ட ஏழு இலட்சம் ரூபாவும் பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணப்பொருள்களாக கொடுக்கப்பட்டு பற்றுச் சீட்டும் நேரடியாக கையளிக்கப்பட்டது இதற்கான கணக்கு

# இணைந்தபல்கலை.கல்லூரி சிரேஷ்டமாணவர் அடாவடி

(யாழ்ப்பாணம்)

வவுனியா இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில் புதிதாக சென்ற மாணவர்களுக்கு சிரேஷ்ட மாணவர்கள் பல துன்புறுத்தல் நடவடிக்கைகளை மேற் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய கல்வியாண்டில் பெரும் சிரமத்தின் மத்தியில் கல்வியை தொடர சென்ற மாணவர்கள் இவ்வாறான அவலநிலைக்கு காரணம் இங்கிருந்து ஏற்கனவே சென்ற சிரேஷ்ட மாணவர்களே இந் நடவடிக்கைகளை மேற் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதிதாக சென்ற மாணவர்கள் தங்குமிட வசதி இன்றி அலைந்து திரிவதாகவும், பெருமளவு பணம் முற்பணமாக செலுத்தியே சில சலுகைகளை பெறவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (05)

# கன்னியர் மட மாணவிகள்

மட்டக்களப்பு - கொழும்பு வீதி

# ராணுவ முகாம் பகுதி போக்குவரத்திற்குத் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ள இடங்களில் உள்ள பிரதான வீதிகள் பயணிகள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளன.

இதனால் மக்கள் பல மைல் தூரங்கள் சுற்றிவளைத்தே போக்குவரத்து செய்து வருவதாகவும், அப்படியானசமயங்களிலும் இராணுவத்தினரால்சோதனைஎன்றபெயரில் கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2000 ஆண்டில் எயிட்ஸால் 4கோடி பேர் பாதிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

இரண்டாயிரமாம் ஆண்டளவில் உலகில் சுமார் நாலு கோடி ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் எச். ஐ. வி வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என உலக சுகாதார நிறுவனத்தின் செய்திக் குறிப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்றே எயிட்ஸ் என அழைக்கப்படும் ஆட்கொல்லி நோயினை எடுத்துவருகின்றது. தென்னாசியாவில், உலகின் வேறு எந்தப்பாகத்திலும் பார்க்க வேகமாகப் பரவிவருகின்றது என தகவல்களை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மார்ச் 1994 வரையில் 129 பேர் வரையில் எச். ஐ. வி. தொற்றினால் கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில் 20 பேர் வெளிநாட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# தப்பிவிட்டனராம்

(கொழும்பு)

நித்தாத வகையில் மட்டுமே நன்மை பயக்கக்கூடிய தாகும்.

தென்னாசிய நாடுகளைப் பொறுத்து இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவதில் இன்று அக்கறையுள்ள நாடாக சிறிலங்கா மட்டுமே உள்ளது. ஏனைய தென்னாசிய நாடுகளின் இந்தியாவுடனானஉறவு சீரானதாக இல்லை. பாகிஸ்தான் நிரந்தரப் பகையாக இருக்க பங்களாதேசும், நேபாளமும் இந்தியாவுடன் நட்புறவுடன் பேசத்தயாராக இல்லை. கடந்த வாரம் ஆட்சிக்கு வந்த நேப்பாளிய மாக்சிய அரசாங்கம் இந்தியா தொடர்பான தனது கொள்கையை மறுபரிசீலனை செய்யப்போவதாக ஏற்கனவே அறிவித்துள்ளது.

இவ்வாறாக அண்டை நாடுகள் எல்லாம் இந்தியா தமது உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் கூறிக்கொள்ளும் அதேவேளை இந்தியாவுடனான உறவையும் மீள் பரிசீலனை செய்து வருகின்றன. இந்நிலையில் சிறிலங்கா நட்புறவை வளர்த்துக் கொள்வதில் அக்கறை இருக்கின்றதென்றால் அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

அதாவது இனப்பிரச்சினை விவகாரத்தில் ஏதோ ஒரு வழியில் இந்தியா தமக்குத் தேவையானதாகவும், உதவுவதாகவும் இருக்கும் என சந்திரிகா அரசு எதிர்பார்ப்பதே காரணமாக இருக்கலாம். ஆனால் இந்தியாவுடனான உறவு முறையைப் பேணுவதென்பதில் மிகவும் அவதானமாக இல்லாதுவிட்டால், இதுவே எதிர்காலத்தில் தொல்லையாக மாறிவிடவும் கூடும்.

இந்தியா ஏற்கனவே இலங்கை விடயத்தில் தலையிட்டு தோல்வியுடனும், அவமானத்துடனும் வெளியேறிய நாடு. இந்தியாவிற்கு இலங்கை விவகாரத்தில் ஆழமான பார்வையும், பல நலன்களும் உண்டு. இந்தவகையில், இலங்கை விவகாரத்தில் அதன் கவனம் எப்பொழுதும் தீவிரமானதே. இதேபோன்றே இனப்பிரச்சினை விவகாரத்திலும், விடுதலைப்புலிகள் தொடர்பாகவும் இந்தியா தீவிர அக்கறை கொண்டுள்ளது.

இந்தவகையில் சிறிலங்கா அரசாங்கம் இந்தியாவுடன் கொள்ளும் நட்புறவானது இலங்கையின் உள்விவகாரங்களைப் பாதிப்படையச் செய்யும் அளவிற்குச் செல்லும் எனத் துணிந்து கூறலாம் இன்று இந்திய அரசாங்கம் வெளியிடும் அறிவிப்புக்கள் இனப்பிரச்சினை விவகாரம் இலங்கையின் உள்நாட்டு விவகாரம் போன்ற தொனிஇருப்பினும்கூட இவ்விவகாரத்தை எவரும் தனது விருப்பத்திற்கு கையாள இந்தியா அனுமதிக்குமா என்பது கேள்விக்குரியதே. ஆகையினால் இந்தியாவுடன் நட்புறவு என்பது அண்டை நாட்டுடன் பரஸ்பர நட்பு என்பதுடன் மட்டும் நின்று கொள்ளுதலே பெரிதும் நன்மைபயக்கும். இல்லாது போனால்,அது சிறிலங்காவின் இறைமைக்கும் நல்லதல்ல. இலங்கை மக்களுக்கும் நல்லதல்ல.

மாணவர்கள் இவ்வாறான அவலநிலைக்கு காரணம் இங் ... பெறவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (05)

## கன்னியர் மட மாணவிகள் பரிசில்கள் பெற்றனர்

யாழ். மாநகராட்சிமன்றமும், கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்திய நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகர எல்லைக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடாத்திய போட்டியில் திருக்குடும்ப கன்னியர் மடமாணவிகள் பரிசில் பெற்றுள்ளனர். இப்போட்டிக்கான ஒத்துழைப்பை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் வழங்கியிருந்தது தெரிந்ததே இதில் திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளான செல்விகள் அனற்றஜினிவின்சன், ஆன் சோபனா ஜேசுதாசன் சசிதரா அம்பலவாணர் ஆகியோர் பரிசில்களை பெற்றுள்ளனர் இவர்களுக்கான பரிசில்களை பிரதிக்கல்விப்பணிப்பாளர் புலேந்திரன் நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி தானையா ஆகியோர் வழங்கினார்.

## குரங்கை சீனவெடியால் மிரட்டிய சிறுவன் காயம்

(தென்மராட்சி)

சிறுவனின் விளையாட்டு வினையான சம்பவம் ஒன்று அண்மையில் மட்டுவில் பகுதியில் இடம் பெற்றது.

மட்டுவில் பகுதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சாரதாஸ் வயது (05) என்பவரே இவ்வாறு படுகாயம் அடைந்தவராவார்இவர்தனது வீட்டில் குரங்குகள் வந்து அட்டகாசம் புரிந்து விடுவதால் இச்சிறுவன் கையில் சீன வெடியை எடுத்து கொளுத்தி மிரட்டி வருவது வழக்கம் போல் நேற்று முன்தினம் இவர் அவ்வாறு செய்த போது அது தவறுதலாக வெடித்ததில் இவரது கண், உடம்பு மிகவும் பாதிக்கப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(86)

## வறுமைநிவாரண முத்திரை குறித்து அறிவுறுத்தல்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்களின் பாடசாலை செல்லும் வயது 5 தொடக்கம் 18 வரையுள்ள பிரிவுக்குரிய பிள்ளைகளுக்கான மேலதிக வறுமை நிவாரண உணவு முத்திரைப் பத்திரம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தத்தமது கல்வி கற்கும் பாடசாலை அதிபரிடம் உறுதிப்படுத்திச் சிபார்சுக் கடிதம் பெற்று தத்தமது பகுதிக் கிராம அலுவலரிடம் பாடசாலைக் கடிதத்தை ஒப்படைத்து வினாப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி அதில் குடும்பத் தலைவர் ஒப்பமிட்டு தமது பகுதிக் கிராம அலுவலரிடம் பின் ஒப்படைக்குமாறு யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (24)

...க்குநிவாரணப்பொருள்களாக கொடுக்கப்பட்டு பற்றுச் சீட்டும் நேரடியாக கையளிக்கப்பட்டது இதற்கான கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை என கொழும்புத் தலைமையகம் கூறுவதுதாங்கள் செய்த குற்றங்களை மூடிமறைப்பதற்காக செய்யப்படும் கபட நாடகம் ஆகும்.

இதேவேளை யாழ் கிளைக்கு வரவேண்டிய இரண்டு மில்லியன் ரூபா பணம் கொழும்பு தலைமையகத்தால் இன்னமும் அனுப்பப்படவில்லை. பனடோலுக்காக யாழ் கிளை செலுத்த வேண்டிய பாக்கிப் பணத்தை கழித்துக் கொண்டு மிகுதியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்குமாறு எமது நிர்வாகம் வலியுறுத்திக் கூறியுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தப்பிவிட்டனராம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்க கொலையுண்ட பாலத்துறை குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக தேடப்பட்ட இரு தமிழ்ப் பெண்கள் நாட்டை விட்டு தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிய வந்துள்ளது.

## இணுவில் மத். கல்லூரி 7 மாணவர் சித்தி

உடுவில் கோட்டத்தில் இணுவில் மத்திய கல்லூரியில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஏழுமாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். அதி உயர் புள்ளியாக இப்பாடசாலையில் 173 புள்ளிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கப்படுகிறது. ([illegible])

## புலமைப்பரிசில் முடிவுகள்

கடந்த வெள்ளியன்று எமது பத்திரிகையில் வெளிவந்த ஐந்தாம்ஆண்டுபுலமைப் பரிசில் முடிவுகளில் சென் ஜோன்ஸ் பொஸ்கோ பாடசாலையில் 170 புள்ளிகளைப் பெற்றவர் எஸ். மஜிந்தினி என திருத்திவாசிக்கவும் மஜிந்தன் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழாலை தெற்கு அ. மெ. த. க. பாடசாலையில் ஏ. ரஜீத்- 161 புள்ளிகளை பெற்றுள்ளார். ஏழாலை ம. வித்தியாலயத்தில் எஸ். சுசிபா- 155 புள்ளிகளை பெற்றுள்ளார்.

புலமைப் பரிசில் முடிவு;

## நான்காவது இடமும் யாழ். மாவட்டத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்டில் நடந்து முடிந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றியோரில் அகில இலங்கை ரீதியில் நான்காம் இடத்தையும் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கே கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை யாழ் மாவட்டத்தில் இரண்டாவது அதிகூடிய புள்ளிகளான 183ஐ பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் உமைபாலன், சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி. கோகிலன் ஆகியோர் பெற்றுள்ளனர். மூன்றாவது அதிகூடிய புள்ளிகளான 181ஐ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச்சேர்ந்த ப.சைல்லஜென் மற்றும் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். பிரசாத் ஆகியோரும் பெற்றுள்ளனர். இதே வேளை யாழ் மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும் இதே பாடசாலையைச் சேர்ந்த மாணவன் ஜசிந்தன் பெற்றிருப்பது தெரிந்ததே.

## சைக்கிள் விபத்து

மினிவான் ஒன்று சைக்கிளுடன் மோதியதில் சைக்கிளில் வந்தவர் காயமடைந்தார். கடந்த வியாழனன்று மாலை 4. 30 மணியளவில் சுன்னாகம் இலங்கை வங்கி அருகில் இடம்பெற்ற இவ் விபத்தில் மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து சுன்னாகத்தில் வசிக்கும் செ. அன்னராசா (55) என்பவரே காயமடைந்தவராவார். (27

## புலிகளின்குரல் நிகழ்ச்சி நிரல்

**1994- 12- 04**

**ஞாயிறு இரவு**

08.01- இசையரங்கம்- நிகழ்ச்சியில் பாடுபவர் திரு. சி. குலசிங்கம் அவர்கள்

08.20- தாயகப்பாடல்கள்

08.30- செய்திகள்

08.40- தொடர் நாடகம்- பொன். கணேசமூர்த்தி எழுதும் ''இலங்கைமண்'' 49-ம் அங்கம்

09.00- மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

**1994- 12- 05**

**திங்கள் காலை**

07.02- மாவீரவணக்கம்

07.15- நீங்கள் கேட்டவை

07.30- செய்திகள்

07.35- பத்திரிகைச் செய்திகள்

07.40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08.00-மணிக்கு காலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## நினைவுடன் 10 ஆண்டுகள்



பிறப்பு:-

26-01-1945

அழிப்பு:-

04-12-1984

### திரு.வல்லிபுரம் தியாகராசா
### (முன்னாள் உதவித்தபாலதிபர்-முருங்கன்)

அன்பான குடும்பத்தலைவனாய், பாசமுள்ள தந்தையாய்
எம்மை வழிநடத்திய தெய்வமே!
அரக்கரின் அழிப்பில் நிகழ்ந்தது பிரிவு
இன்று, எம்மை வழிநடத்துவது
உங்கள் நினைவுகள் மட்டுமே.

கோகுலம்,
மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

- மனைவி, பிள்ளைகள்

(10227)



## ஆறாத்துயரில் ஆறாம் ஆண்டு



தாயின் மடியில்

22-5-44

தமிழீழ மண்ணில்

04-12-88

ஆசிரியர்
### திரு.நா.கருணானந்தசிவம்

அன்னைத் தமிழாழின்
அரும் புதல்வனே
அடிமை நிலையினை
ஏற்றிட மறுத்தாய்
எல்லோரிற்கும்
ஏணியாய் இருந்தாய்
ஏற்றிய ஏணியை
மறந்து வாழ்ந்து
மண்ணுக்காக என்றனர் இன்று


# ஊழல் நிருபிக்கப்பட்டால் ஐ.தே.கவில் இடமில்லை

## உறுப்பினர்க்கு கட்சித்தலைவர் ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

ஊழல்புரிந்ததாகநிருபிக்கப்படுபவர்களுக்கு ஐ.தே.கவில் எதுவித பதவியும் வழங்கப்படமாட்டாது இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த அரசில் இருந்த அமைச்சர்களோ, கட்சி உறுப்பினர்களோ ஊழல் செய்ததாக, தற்போதைய அரசாங்கம் நியமித்துள்ள ஊழல் விசாரணை ஆணைக்குழு சட்டபூர்வமாக நிரூபித்தால் அவ்வாறானவர்களுக்கு ஐ.தே.கவில் எதுவித பதவியும் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

சுசரித்த மண்டபத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் கடந்த காலத்தில் சில தவறுகள் இடம்பெற்று விட்டன. அத்தகைய தவறுகள் நிகழ இனி இடமளிக்க மாட்டோம் எனவும் குறிப்பிட்டார்.

# பாடசாலை அனுமதிக்கு பணம் வசூல்; அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை

புதிய கல்வி ஆண்டிற்கென பாடசாலைகளில் மாணவர்களைப் புதிதாகச் சேர்க்கும்போது அதிபரோ, அபிவிருத்தி சபையோ பணம் அறவிடுமாயின் அந்த பாடசாலை அதிபர் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன் என கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரான தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவில் தற்போதுள்ள பாடசாலைகளில் புதிய கல்வி ஆண்டிற்கென மாணவர்களைப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளும்போது பாடசாலை அதிபர்களும் அபிவிருத்திச் சபைகளும் பணம் அறவிடுவதாகவும் இதனால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் பெரிதுப் பாதிக்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே அவர் மேற்கண்ட எச்சரிக்கையை சகல பாடசாலை அதிபர்களுக்கும் விடுத்துள்ளார்.

இதுகுறித்து கல்வி அமைச்சர் விபரிக்கையில்; இன்று எமது நாட்டில் இலவசக் கல்வித் திட்டமே அமுலில் உள்ளதாக நாம் பெருமை அடித்துக் கொண்டாலும் உண்மையில் பாடசாலைக்கு பிள்ளைகளைச் சேர்க்கப் போகும்போது அங்கு ஒரு ஏல விற்பனையே நடைபெறுகிறது. பாடசாலை அபிவிருத்திச் சபைக்கென பணம் சேர்க்கின்றனர். பணம் கொடுப்பவர்களின் குழந்தைகளுக்கே பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்ப்புக் கிட்டுகிறது. இது இலவச கல்வித் திட்டத்திற்கு மாறானதாகும். பாடசாலை மாணவர்களை சேர்ப்பதற்கான கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு மாறாக ஒரு சதமேனும் பணம் அறவிடும் அதிபர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிபரின் அங்கீகாரமின்றி பாடசாலை அபிவிருத்தி சபை பணம் சேர்க்க முடியாது அதனால் பணம் சேர்க்கும் பாடசாலை அபிவிருத்தி சபைகள் இருப்பின் அதற்கு பாடசாலை அதிபரே பொறுப்பாகும். அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கமட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## பரீட்சை மண்டபம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை ஆரம்பமாக இருக்கும் க.பொ.த. (சா/த) பரீட்சையின் யாழ். வலயம்-1 இல் அமைக்கப்பட்ட இரண்டு பரீட்சை மண்டபங்கள் வேறு இடங்களிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சென் ஜோன்ஸ் அக்கடமியில் அமைக்கப்பட்ட மண்டபம் -2 சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் அமைக்கப்பட்ட மண்டபம் -2 பிறவுண றோட்டில் அமைந்துள்ள புங்குடுதீவு மகாவித்தியாலயத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். வலயம் - 1 கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா, தி)

## 10 வாரங்கள்

கள் பழுதடைந்து இருப்பதால் பொருள்களை இறக்கும் வேலை மேலும் தாமத

## பொலிஸ்

மாறு பிரதி பாதுகாப்பு அமைச்சர்-கேணல் அனுருத்த ரத்வத்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு சேவையிலிருந்து விலகிச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் தங்களது வேண்டுகோள் விண்ணப்பங்களை தனித்தனியாக மேன்முறையீடாக சமர்ப்பித்துள்ளனர்.

தங்களுக்கான பதவியுயர்வும், சம்பளப் பாக்கிகளும் தாங்கள் சேவையில் இணைந்த காலத்தை கருத்தில்

## புதிய

பிற்காக சிறிலங்கா பெரும் போட்டியில் ஈடுபடவேண்டி இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் உலக வங்கியின் தூதுக்குழு முதல் முறையாக சந்தித்து பேசியுள்ளது, அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போதே போல் ஐசாக் சிறிலங்காவின் போக்கு இப்படியே தொடர்ந்தால் அது பொருளாதாரத்தையும், உற்பத்தியையும், வேலைவாய்ப்பு அதிகரிப்பையும் பாதிக்கும் எனக் கருத்து வெளியிட்டார்'

இதுபற்றி பி. பி. சியின்

# மன்னார்க் கடலில் மீன்பிடிக்க நிபந்தனை

மன்னார் கடற்பிராந்தியத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு பல நிபந்தனைகளை விதித்துள்ளது.

பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் மட்டுமே மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியும் என்றும் கடலில் சுமார் ஒரு மைல் தூரம் வரையுமே செல்ல முடியும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை விட, பகல் நேரங்களில் மட்டும் கடற்தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வடபகுதி கடலில் காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரையும், மன்னார் தென்பகுதிக் கடலில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையும் மாத்திரம் மீன் பிடிக்க முடியும்.

இயந்திரப் படகில் செல்வோர் 15 குதிரை வலு கொண்ட இயந்திரங்களையே வைத்திருக்கலாம்.

ஒரு படகில் நாலு பேருக்குட்பட்டவரேசெல்லமுடியும். மீனவர்கள் பாதுகாப்பு படையினரால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் படையினர் குறிப்பிடும் இடத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் அதே இடத்துக்கு வந்து சேரவேண்டும். ஆகிய நிபந்தனைகள் படையினரால் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மிட்ரவுண் றோற்ரறக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில்இன்று மாலை 3 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சென்மேரிஸ் வி. க எதிர்த்து ஜங்கென்றீஸியன் விளையாட்டுக்கழகமும், பாடும்மீன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து றோயல்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

## மேலும் ஒரு பொலிஸ் பலி

புல்மோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பொலிசாரின் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.


## இப்பொழுதுகாண்பிக்கப்படுகின்றது

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி பிற்பகல்: 2.30, 4.30, 6.30.
சனி, ஞாயிறு காலை 10.30, பி.ப. 2.30, 4.30, 6.30

விடுதலைப் புலிகளின்
கலை பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து
திரைப்படப் பிரிவின் தயாரிப்பில்
உருவாகிய
ந. கேசவராஜனின்

### "பிஞ்சு மனம்"

(வர்ண முழு நீள படம்)

திரைப்பட பிரியர்களுக்கு மற்றுமோர் அரிய திரை விருந்து 'பிஞ்சு மனம்'!.
தமிழீழ திரைவானில் உலாவி வருகின்றது 'பிஞ்சு மனம்'!
தமிழீழ மக்கள் பார்த்து மகிழ 'பிஞ்சு மனம்'!

(சி-10814)

மறைந்தாய் நீ தான் மண்ணுக்காக மறவனே.

இத்துன்ப நிகழ்வினை உடுவில் விழிப்புலன் இழந்தோருடன் அவரின் குடும்பத்தினர் பகிர்ந்து கொள்கின்றனர்.

''பூம்புகார்''
காங்கேசன்துறை

நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

(10247)

# 2-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்: 04-11-1972

தாயக மண்ணில் 26-11-1992

திதி: 04-12-1994

## லெப். செங்கண்ணன் (பூவாசம்)

(புஸ்பம் - இளங்கீரன் - புங்குடுதீவு - 4)

ஆண்டுகள் இரண்டு அல்ல
இருபது ஆனாலென்ன கதறுகிறோம்
கண்ணீர் சிந்துகின்றோம்.
ஓடிவரமாட்டாயா ஐயா,
திரும்பும் திசையெல்லாம்
உங்கள் அழகு முகம்
எங்கள் இதயத்தைத் தினமும் வாட்டுதையா,

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

(10290)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04.ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாகலாம் எனவும் இதனால் நிவாரண விநியோகம் மேற்கொள்வதில் மேலும் காலவிரயம் ஏற்படும்எனவும் தெரிய வருகின்றது.

செயலக புனர்வாழ்வுப் பகுதியின் அசமந்த போக்கினால் நிவாரண விநியோகம் தாமதமாவதால் இடம் பெயர்ந்த மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருப்பதாகவும் பொறுப்பானவர்கள் துரிதநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உலக வங்கியின்

அபிவிருத்திக்கான ஆய்வுப் பட்டறையில் ஆராயப்பட்ட விபரங்கள் மற்றும் தரவுகள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது.

யாழ். மாவட்டத்தில்இந்த முழுமையான புனர்வாழ்வு நடவடிக்கையில், விவசாயம், கால்நடை, நீர்வளம், கடல் வளம்,கைத்தொழில், பொருளாதார உட்கட்டுமானங்கள், சமூகநலன்சேவைகள், குடியிருப்பு வசதிகள், நகர அபிவிருத்தி, அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகள் யாவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டது.

அரசியல் நிலைமைகளுக்கு அப்பால் நின்று இந்த புனர்வாழ்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கான திட்டம் தயாரிக்கப்படும்எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆறுபேர் கொண்ட இக்குழுவில் யோகராஜ், நாராயணன்,லோகேஸ்வரன் ஆகியோரும் அடங்குவர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இந்த முழுமையான புனரமைப்பு நடவடிக்கைக்கு புனர்வாழ்வு அமைச்சின் உதவியும் பெறப்படும் எனவும் அறியப்படுகின்றது. (தி,பா)

ந்த காலத்தை கருத்தில் கொண்டு வழங்கப்படவேண்டும் எனவும் இவர்கள் கோரியுள்ளனர்.

### சந்திரிகா

ழும்பிலுள்ள கோல்பேஸ் ஹோட்டலில் இச் சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் எனவும் கைதுசெய்யப்படுவதற்கு முந்தைய தினமே சிங்கப்பூரிலிருந்து கொழும்பு வந்திருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஐ. தே. க.

வும் அவர் மேலும் கூறியுள்ளார்,

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை ஆதரிக்க தொண்டமான் முடிவு செய்தமையும், இ. தொ. காவின் எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தமையும் ஐ. தே. கவினரை கோபமுறச் செய்து விட்டிருப்பதாக தெரியவருகிறது தொண்டமான் மற்றும் இ. தொ. காவின் நடவடிக்கைகள் தொடர்பான தமது தீர்மானத்தை ஐ. தே கவின் வருடாந்த மாநாட்டில் அல்லது அதற்கு பின்னர் ரணில் அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### க. பொ. த.

வொரு நாள் காலையும் பரீட்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்க யாழ். கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் இப் பரீட்சை நாடு முழுவதும் 3 ஆயிரத்து 856 பரீட்சை நிலையங்களில் 5 இலட்சத்து 66 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என பரீட்சைத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

(பா,தி)

கொழும்பு முகவர்களில் ஒருவரான அமல் ஐயசிங்க மேலும் கூறுகையில்: நுகர்வோர் நன்மை பெறும்பொருட்டு அரசு அறிமுகப்படுத்தியுள்ள விலை வாசி உச்சவரம்புகள், உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும், நாட்டின் பட்ஜெட்டில் துண்டு விழும் தொகையைக் கூட்டும் எனவும் உலக வங்கி கருதுகிறது.

புதிய அரசு மீண்டும் ஆரம்பித்துள்ள விவசாய மானிய திட்டத்தை ரத்து செய்யும்படி. உலகவங்கி நெருக்குதல்கொடுத்து வருகிறதுஎன்றார்.

### ராணுவ

வகிக்கும் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவரும், முன்னாள் அரசியல்வாதி ஒருவரும் குற்றமிழைத்த இராணுவ அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுப்பதை தடுத்து வந்தனர்.

முகாம் தாக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த உயர் இராணுவ அதிகாரிகள் தொடர்ந்தும்பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கின்றனர். ஆனால் அவர்கள் மீது எந்த ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதுபோன்ற பாரிய தாக்குதல் சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதுநடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக்கப்பட்ட படைவீரர்கள் சார்பில் கேட்கப்பட்டுள்ளது.

### உலக

உலகவங்கி வேண்டி உதவியை வழங்கும். இவ்வாறு கொழும்பு வந்துள்ள உலக வங்கியின் தென்னாசிய விவகாரங்களுக்கான அதிகாரி போல் ஐசக் தெரிவித்துள்ளார்.

புனரமைப்பு வேலைகளுக்கான திட்டமிடலிலும் உலக வங்கி சமாதானம் ஏற்பட்டவுடன் உடனடியாக இறங்கும் என்வும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ்

**B A. (SLAS)**

(மேலதிகச் செயலாளர், கல்வியமைச்சு வ.கி.மா.)

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் நற்பணி வாழ்வையும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.

பிரதேச செயலரும்,
ஊழியர்களும்
பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.

(10288)

# கண்ணீர் அஞ்சலி

புங் நடுதீவு
அமரர்

## சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ்

**B. A.- (cey) S. L. A. S.**

கல்வி, கலாசார அமைச்சின் பிரதி பிரதம செயலாளர், கிராம அபிவிருத்திப் பணிப்பாளர், மாகாண நிர்வாக பிரதிப் பிரதம செயலாளர்
(வடகிழக்கு மாகாணம்)

அவர்களின்;

மறைவு கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்துள்ளோம். இவரின் இழப்பு தமிழீழ நெஞ்சங்களில் நீங்காத துயரத்தையும், வேதனையையும் தந்துள்ளது. இலங்கை நிர்வாக சேவையில் இருந்து இப் போர்க்கால சூழலில் எம் மண்ணில் இருந்து எம் மக்களுக்கு அளப்பரிய சேவை செய்துள்ளார். குறிப்பாக தீவக மக்களுக்கு இவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புங்குடுதீவு, நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம்

(சி-10837)